REGISTERED No. M. 6165. அணா. 2

698

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

OFFICE ... MADRAS
30 APR 1955
698
2-55

மாதப் பத்திரிகை

மே 1955.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| ரமலான் நோன்பின் புனிதப் பெருநாள். ... ... | 1 |
| ஹாத்திம் தாயீ வாழ்க்கை வரலாறு ... ... | 9 |
| (டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் பாகவி) | |
| இரத்தச் சின்னம் (தொடர் கதை) ... ... | 13 |
| இஸ்லாத்தின் தன்மை! ... ... | 22 |
| (எஸ். எஸ். அலாவுத்தீன்) | |
| நோய்களை நீக்கும் நாயகப் புகழ்மாலை. ... ... | 23 |
| ...வர் பகுதி) ரஹ்மத்துல்லா மஆலி பாகவி | |
| ... (மாஸ்டர் கமல் பாபு) ... ... | 27 |
| ... சர்ச்சில்" ... ... | 28 |


...இஸ்லாம் ஆபீஸ் :
..., ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

JL
[illegible], N2 4 F L
1955
187042

# பத்ஹுல் இஸ்லாம்

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1-8-0 |
| தனிப் பிரதி | அணா. | 0-2-0 |

மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2-0-0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


## மிஃராஜுல் ஆரிபீன் பீ தர்ஜுமத்தி மின்ஹாஜில் ஆபிதீன்

"மிஃராஜுல் ஆரிபீன்" என்பது பதினான்கு இல்முகளுக்கும் ஓர் அலைகடலாகிய நாயகம் இமாம் கஸ்ஸாலி றஹிமஹுல்லாஹி அலைஹி அவர்கள் இயற்றியுள்ள ஞானநீதக் களஞ்சியமான 'மின்ஹாஜில் ஆபிதீன்' என்னுங் கிரந்தத்திலிருந்து வெகு நுட்பா நுட்பமாக மொழி பெயர்த்ததோர் அரிய சாதனமாகும்; அறிவுக்கு ஆகாரமாம். இதில் அடங்கி யிருக்கும் 'மஃரிபா' என்னும் தீட்சை ஞானத்தின் பாகுபாடுகளையும், நேர்வழிக்குரிய சாதனத் தெளிவுகளையும், யோகாப்பியாச முறைகளையும் பற்றி விவரித்தெழுத வேண்டுமானால் எவ்வளவு நீடித்தெழுதினாலும் முடியாது. கோட்டமிட்ட நண்பர்களுக்கே இதன் அருமை விளங்கும்.

சுத்தத் தமிழ் கலிகோ பைண்டு ரூ. 4

அரபுத் தமிழ் றப்பு காகிதம் கலிகோ பைண்டு ரூ. 4-6-0

(அச்சாகிறது)

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ 20, ஹைரோட் திருவல்லிக்கேணி மதருஸ் 5.

# الاسلام

# பத்ஹுல் இஸ்லாம்.

## மே—1955.

OFFICE OF THE REGISTRAR OF B... 30 APR 1955 MADRAS

## ரமலான் நோன்பின் புனிதப் பெருநாள்.

(இகலோகம், மறுலோகத்துக்குரிய விவசாய நிலமாகும்.)

---

இஸ்லாமிய சமூகத்தின் ஆத்மார்த்தத் துறை அறுவடைக் காலமே புனித ரமலான் மாதமாகும்.

மனித வாழ்வுக்கு இரண்டு வகை சாதனம் அத்தியாவசிய மானது. ஒன்று உணவுப் பண்டத்துக்கு வேண்டிய தானியம். மற்றொன்று ஆத்ம முக்திக்கு வேண்டிய புண்ணிய பாக்கியம். ஒன்று மாந்தர் இத்தரணியில், சொற்ப காலமேனும் சாகாமல் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமானது உணவு. அந்த உணவுப் பொருளுக்கு தானியம், கனிவர்க்கம் முதலியன கொண்டு கிடைக்கிறது.

தானியம் மாந்தருக்கு எங்கிருந்து கிடைக்கிறது? இது யாருக்கும் தெரியாத விஷயமல்ல. வானத்திலிருந்து மழை எப்பொழுது பெய்கிற தென்பதை மாந்தன் முன்கூட்டி அறிந்துணர்ந்து, அந்தக் காலந் தவறாமல், பூமியைக் கொத்திப் பதம் பண்ணி, சமன் செய்து, நீர் விட்டுத் திருத்தி அளவு போல் தானிய வித்துக்களை பரவ விதைக்கின்றான். ஆண்டவன் அருளென்னும் மழை, காலந் தவறாது அதன் மீது பொழிந்து அந்தப் பயிரை நன்கு வளரச் செய்கிறது. அதிலிருந்து தானியக் கதிர்கள் உண்டாகின்றன. பிறகு மழைப் பொழிவு குறைந்து, வெய்யில் உஷ்ணம் அந்தப் பயிர் மீது படுகிறது. அதனால், தானியக் கதிர் மணியில் முற்றல் தன்மை ஏற்பட்டு பக்குவ மடைகிறது.

அப்புறம் மனிதன் வந்து, பூமியைப் பதம் பண்ணி தான் நீர் பாய்ச்சி, வளர்த்த பயிர் அளித்திருக்கும் பலனைக் கண்டு பார்க்கிறான்.

ஆஹா! நாம் உழைத்துப் பாடுபட்டு, தானியம் தூவி, நீர் பாய்ச்சி வளர்த்த பயன், பயன் தந்து விட்டது என்று புளகாங்கிதம் அடைகிறான். அதுமட்டுமல்ல, தன்னுடைய சகபாடிகளையும், துணைவர்களையும், உழைப்பாளிகளையும் கூட்டி வித்து கதிர்களை அறுத்தெடுத்து, களத்தில் போட்டு, துவைத்தடித்து, தானிய மணி வேறாகவும், கூளங் குப்பை வேறாகவும் செய்கிறான்.

பிறகு தானியங்களை மாத்திரம் தனிக் குவியலாகக் குவித்து அளந்துப் பார்க்கிறான். என்ன ஆச்சரியம்! அவன் முதல் முதல், பூமியைக் கிளறி தானியம் விதைத்த போது, இரண்டுபடி வித்துக்களைத்தான் தூவி யிருந்தான். இப்போது இருபது முப்பது கலம் தானியக் களஞ்சியத்தைக் காண்கிறான்.

ஒன்றுக்குப் பத்தாக, ஒன்றுக்கு நூறாக, ஒன்று பதின்மடங்காக இப்படி விளைகிறதே இது யாருடைய உதவியினால், யாருடைய கிருபையினால், யாருடைய பேரருளால் என்பதை, உத்தம சித்தமுள்ள மனிதன் மட்டுமே உணர்ந்து பார்க்கிறான். நிலத்தில் தானியம் எப்படி உண்டாயிற் றென்பது அவனுக்கு ஸ்பஷ்டமாய் விளங்கத் தொடங்குகிறது.

வானத்திலிருந்து நீரை மழை ரூபமாக பொழியச் செய்தவன் யார்? பூமியில் விதை நட்டால், அதை முளை ரூபமாகவும், நாற்று ரூபமாகவும், செடி கொடி ரூபமாகவும் பூமியிலிருந்து வெளிப்படுத்தி வைப்பவன் யார்? தண்ணீர் வேண்டிய போதெல்லாம் வானத்திலிருந்து மழை பொழிய வைத்து, நீர் வேண்டாத போது, சுயமே மாரிகாலத்தை பனிக்காலமாகவும், பிறகு கோடைக்காலமாகவும் மாற்றி, தானியக் கதிர்களை காய வைத்து மணிகளை முற்ற வைப்பவன் யார்?

நற்குண நல்லொழுக்க, இயற்கையினிடம் மதிப்பும், அந்த இயற்கையை சிருஷ்டிக்கும், பரம கருணாகரனாகிய அல்லாஹுதஆலா என்னும் இறைவனிடம் பக்தியும் வைத்துள்ள முஸ்லிம், மூமின், முத்தகீ ஆகிய நல்ல மனிதன் அங்ஙனம் தன்னுடைய தானியப் பெயர் நன்கு விளைந்து பலன் தந்ததற்கு தொழுது, நன்றி தெரிவித்து, ஷுக்ரு செய்து வணங்குகிறான். இப்படிப்பட்ட நல்லடியானுக்கு ஆண்டவன் மேன்மேலும் விளைச்சலை அதிகப்படுத்தி அவனது ரிஸ்க் என்னும் உணவு வசதியில் அபரிமிதமான அபிவிருத்தி என்னும் பரக்கத்தைத் தருகிறான்.

அங்ஙனம் எல்லாம் வல்ல இயற்கை நாதனாகிய அல்லாஹுதஆலாவை வணங்கி, நன்றி தெரிவிக்காமல், தான்தோன்றித் தனமாய் நாத்திக வாதம் பேசிக் கொண்டு, வயிறு புடைக்கத் தின்று ஏப்பம் விடும் பேர்வழிக்கு அதிசீக்கிரமே ஆண்டவன் தண்டனை அளிக்

கிறான். பலா முஸீபத் என்னும் மிடுமையும் நோயும் பஞ்சமும் அவனை வந்தாட் கொள்கிறது. அவனைப் பீடிககும் தரித்திரம் அண்டியவர் அயலார் எல்லோரையும் பிடித்தாட் கொள்கிறது. வானம் காலமறிந்து மழை பொழிவதை நிறுத்தி விடுகிறது. பூமி முளைவிட்டு தள தள வென செடியாய் வளர்வதை நிறுத்தி விடுகிறது. அப்படி முளை விட்டு செடியாகி, கதிர் விட்டாலும், அடுத்தபடியாக காற்ருே, பனியோ, வெய்யிலோ கடுமையாக அடித்து பயிர் பட்டுப் போய் விடுகிறது; முளைத்த கதிர் சாவியாய் கூளமாய்ப் போய் விடுகிறது.

## அன்புடைய சோதரீர் !

இதுகாறும் கூறிவந்தது ஓர் உதாரணம்! இது எதற்கு உதாரணம் என்று சிந்தித்துப் பாருங்கள். புனிதம் மிக்க நோன்புடைய மாதமாகிய ரமலான் ஷரீபில் நாம் செய்யும் புண்ணியமான காரியங்களுக்கு மேற் கூறிய விவசாய தானியப் பயிர் விளைச்சல் உதாரணம் மிக மிகப் பொருத்தமாகும் என்ருல், நீங்கள் ஆச்சரியப் படமாட்டீர்கள். அது எப்படி உதாரணம் அதற்குப் பொருந்தும் என்று உங்களில் சில இளவல்கள் பகுத்தறிவாதிகள் கேட்கலாம். அவர்கள் கேட்பது நியாயம். நான் பதில் கூற வேண்டியதும் என் கடமை.

மழை பெய்து, பூமி செழித்து, ஏரி குளம் ஆறுகளில் நீர் நிறைந்திருக்கும் காலத்தில் தானே நாம் நிலம் கொத்தி சீர்திருத்தி பண்படுத்தி விதை விதைக்க வேண்டு மென்று ஆரம்பிக்கின்ருேம்

அதே மாதிரி, புனித ரமலான் மாதம் வந்ததும் அல்லாஹுதஆலாவுடைய நல்லடியார்களாகிய முஸ்லிம்-மூமின்-முத்தகீன்கள், புண்ணியப் பயிர் விளைவிக்கத் தொடங்கி விடுகிருர்கள். தங்கள் உடல், மனம், வாக்கு, உள்ளம், கண், காது, கால், கரம், வயிறு, வாய் எல்லா வற்றைக் கொண்டும் புண்ணிய விவசாயம் புரியத் தொடங்கி விடுகின்றனர்.

அதாவது ஒலுவும், குஸ்லும் செய்து உடல் சுத்தமாக இருந்து கொள்கின்றனர். மனதை பண்படுத்தி தூய்மையாய் வைத்துக் கொண்டு, ஈமானையும், அகீதாக்களையும் உறுதிப் படுத்திக் கொள்கின்றனர். தூஷணமொழி, வீண் வாதம், வியர்த்தப் பேச்சுகள் இல்லாமல் வாயை பரிசுத்தமாக வைத்துக் கொள்வதோடு, அந்தப் புனித ரமலான் மாதம் 30-நாளும், குர்ஆன் ஷரீப் ஓதி, கேட்டு 'திலாவத்' செய்வதிலும், அவ்ராது, வஜீபா, திக்ரு முதலிய புரிந்து புனிதம் அடைவார்கள். இவ்வாறே அந்தியும், சந்தியும் உள்ளத் தூய்மையாய் வைத்துக் கொண்டு, யார் மீதும் அழுக்காரு என்னும்

பொருமைக் கொள்ளாமலும், பிறரைக் கெடுக்க வேண்டும் அல்லது, பிறர் பொருளை அபகரிக்க வேண்டுமென்ற துர் எண்ணங் கொள்ளாமலுமிருந்து தங்கள் 'கல்பை' துப்புறவைத்துக் கொள்வார்கள். அத்துடன் கெட்ட எண்ணத்துடன் பிற பெண்களைப் பாராமலும், ஆபாசக் காட்சிகள் நிறைந்த சினிமா, நாட்டியம், கூத்து முதலியன பாராமலுமிருந்து ரமலான் மாதம் 30 இரவுகளையும் கண்ணியப் படுத்தி வைப்பார்கள். இவ்வாறு, மனச் சாந்தியை கிளறி காம விகாரத்தை உண்டாக்கும் படியான ஆபாசப் பாட்டுகளையும், அருவருப்பான ராகங்களையும், கடைத் தெருவிலும், முச்சந்தியிலும், உளுத்தப் பேர்வழிகளான போக்கிரிகளும், விபசாரகர்களும் மானங் கெட்டவர்களும் திட்டிக்கொள்ளும் பேசிக்கொள்ளும் வசைச் சொற்களை காது கொடுத்துக் கேளாமல், விலகிச் சென்று தங்கள் செவிகளை பாதுகாத்துக் கொள்வார்கள். இன்னும், பாபச் செயல்களும், பாதகக் காரியங்களும் நடைபெறும் இடங்களுக்குப் போகாமல் தங்கள் கால்களை தடுத்துக் கொண்டு, புண்ணியப் பணியாகிய வணக்கம் புரிய பள்ளிவாசல் (மஸ்ஜிது) களுக்கு அதிகம் நடப்பார்கள். இன்னும், யாரையும் அடிக்காமலும், எளியோரை துன்புறுத்தாமலும், திருடாமலும், பொய் கணக்கு எழுதாமலும், ஆபாச நிர்வாணப் படங்கள் வரையாமலும் தங்கள் கரங்களை பாதுகாத்துக் கொள்கின்றனர்.

இவை மட்டுமல்ல, முக்கியமாக இந்தப் புனித றமலான் மாதம் 30 நாளும் தங்கள் வாயையும் வயிற்றையும் அல்லாஹு தஆலாவுக்காக, ஒரு குறிப்பிட்ட வேளை வரையில் கட்டுப் படுத்திக் கொண்டு இதர மாதங்களில் கிடைத்ததற்கரிய அருட் பெரும் பாக்கியங்களைப் பெற்று புனிதப் பெருக்கும், ஆத்ம பாக்கியமும், விமோசன சாதனமும் பெற்றுக் கொண்டு பரம பக்தர்களாய் விளங்குவார்கள்.

அதாவது, வாயை அடக்கி உணவை கட்டுப்படுத்திக் கொண்டும், வயிற்றை அடக்கி, பசியைக் கட்டுப்படுத்திக் கொண்டும், அல்லாஹு தஆலாவின் கட்டளைக் கிணங்கி நோன்பு நோர்ப்பார்கன், பரமகுண சீலர்களான முஸ்லிம் பக்தர்கள்!

ரமலான் மாதத்தில் நோன்பு நோர்ப்பதை ஒரு சில அவிவேகிகள், "வீணே பட்டினிக் கிடந்து கஷ்டத்தை உள்ளாக்கிக் கொள்ளும் ஓர் வியர்த்தமான மதக் காரியம்" என்று எண்ணிக் கொண்டும் பேசிக் கொண்டும் திரிகின்றனர். அது அவர்களின் அஞ்ஞான, அவிவேகத் தன்மையைத் தான் காட்டுகிறது. அந்தப் பகுத்தறிவற்றோர் ஏன் சிந்தித்து யோசித்தல் கூடாது?

இரவும் பகலும் இருபத்திநான்கு மணி நேரமும் மனிதன் ஓதாமல் எதையாவது தின்று கொண்டும், மென்று கொண்டும்,

18042

விழுங்கிக் கொண்டும் தண்ணீர் பானம் பருகிக் கொண்டும் ஏப்பம் விட்டுக் கொண்டும் வயிற்றைத் தடவிக் கொண்டுமா இருக்கிறான். அப்படி இருக்கத்தான் முடியுமா? அப்படி இருந்தால், மனித உடல் நிலை என்னாகும்? இதை சற்று யோசித்துப் பார்ப்போம்.

'லங்கணம் பரம அவுஷதம்' என்றொரு சமஸ்கிருத பழமொழியுண்டு. 'பட்டினிக் கிடப்பதே மகா மருந்து' என்பது அதன் பொருள். பட்டினி கிடப்பதென்றால் எப்படி? இரவும் பகலும் இருபத்திநான்கு மணி நேரமும், மாதம் 30 நாட்பகலும், வருடம் 12 மாதத்து 364 நாட்களும் பட்டினி கிடக்க வேண்டுமென்பதில்லை. இரண்டு வேளை பிரியாணி, புலவு, கிச்சடி, ரொட்டி, குர்மா, முட்டை, கட்லிஸ், சாப்ஸ் போன்ற கடின பதார்த்தங்களை உணவாகக் கொண்டவன், மூன்றாவது வேளை எந்த சாதாரண சாப்பாட்டையும் உட்கொள்ள மனமில்லாமல், வயிறு இடங் கொள்ளாமல் ஜீரணக் கருவிகள் சம்மதிக்காமல், குடல் அனுமதிக்காமல், வயிற்றுப் பெருக்கால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பா னென்பதில் சந்தேகமில்லை. அப்படிப்பட்டவனுக்குத் தான் பட்டினிக் கிடப்பது மகா மருந்து என்ற பழமொழி பிறந்தது. இது சாதாரண உலக வழக்கம்.

ஆனால், ரமலான் மாதம் 30-நாளும், முஸ்லிம்-மூஃமின்-முத்தகி பக்த கோடிகள் "அஸ்ஸவ்ம்" நோன்பு நோர்ப்பது, மகா அற்புதமான முறையாகும். பக்தியுள்ள முஸ்லிம் ஆண்டுக்கோர் முறை ஷஃபான் 30-ம் நாளை மாலையிலே, மேற்வானத் திசையை நோக்கி பரிசுத்த ரமலானின் புனிதக் காட்சி இளம் பிறை தோற்றமளிக்கிறதா வென்று அதி ஆவலோடு நோட்டமிட்டு பார்ப்பான். "ஹிலாலே ரமலானை"க் கண்டதும் அவன் ஆண்டவனை நினைந்து 'அல்ஹம்து லில்லாஹ்' நன்றி தெரிவிக்கிறான். புண்ணிய ரமலான் ஷரீப் வந்து விட்டது என்ற மங்களகரமான செய்தி தன் சகோதர சகோதரிகளுக் கெல்லாம் தெரிவிக்கிறான். உடலை சுத்தப்படுத்திக் கொண்டு உடையையும் தூய்மையாக வைத்துக் கொண்டு, ரமலான் மாத ஸ்பெஷல் வணக்கமாகிய 'தராவீஹ்' தொழுகையை நிறைவேற்றுவதற்காக வணக்க ஸ்தலமாகிய பள்ளி வாசலுக்குச் செல்கிறான். அங்கு, நூற்றுக்கணக்கான முஸ்லிம் பக்த சிகாமணி ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு மஹல்லாவிலும் பள்ளிவாசலில் வந்து கூடுகின்றனர்.

அன்றை இஷா நேரத் தொழுகை, கலகல வென்று கம்பீரமாய் மனமகிழ்ச்சி மயமாய் ஆத்ம பரிபூரணானந்தமாய் விளங்கும். இஷா நேரத் தொழுகையை அடுத்து 'தராவீஹ்' என்னும் இலேசான இரட்டை ரக்கஅத்துத் தொழுகைகளை மெல்ல மெல்ல, அமர்ந்து

தஸ்பிஹ் ஓதிக் கொண்டும் பத்து ஸலாம்களில் இருபது ரக்கஅத்து களை, இமாம் ஜமாஅத்துடன் தொழுது முடிப்பர்.

அந்தத் தராவீஹில் ஓர் விசேஷம் கவனிக்கத்தக்கது. நமது ஈமானுக்கும் இஸ்லாமுக்கும் சகலத்துக்கும் காரணப் பொருளான திருக்குர்ஆன் வேதம் முழுவதையும் அதன் மூல பாஷையாகிய அரபு மொழியில், நல்ல ஞாபக சக்தியோடு, ஓர் அட்சரமும், ஓர் ஆயத்தும் விட்டுப் போகாமல், ஓதுதல் ஒழுங்கோடு, இனியத் தொனியில் தராவீஹ் தொழுகையிலேயே வேதம் முழுவதையும் ஓதி முடித்து இறுதி 27-ம் நாளில் 'கத்தம்' என்னும் 'சம்பூரணம்' பண்ணும் பாக்கியத்தை பெறும் முஸ்லிம்களின் பாக்கியமே நற் பாக்கியமாகும்.

முஸ்லிம் பக்தன், தராவீஹைத் தொழுது முடித்து ஆண்ட வனை நினைத்துக் கொண்டே தூங்கி விடுவான். அப்புறம் நடு நிசிக்குப் பின் 3 மணிக்கோ, 4 மணிக்கோ எழுந்து ஆண்டவன் தனக்கு அளித்த ரிஸ்கின் நல்லதைக் கொண்டு, திருப்தியோடு புசித்து பசியாறுவான்.

இங்ஙனம் அவன் உணவு கொள்ளும் நேரம் 'ஸஹர்' நேரமாத லால் அந்த உணவும் ஸஹர் உணவாகும். நோன்பாளி நோன்பு ஆரம்பிப்பதற்கு இது அத்தியாவசியம். இந்த மெய்யொளிச் சந்தி கால உணவு பானத்திற்கு பிறகு 12 அல்லது 13 மணி நேரம் வரை (அதாவது மறுநாள் மாலை சூரிய அஸ்தமனம் வரை) அவன் ஓர் பருக்கை உணவோ, ஒரு முடக்கு ஜலமோ உட்கொள்ளப் போவதில்லை.

இங்ஙனம் அல்லாஹ்வுக்காக பகலெல்லாம் உண்ணுவிரதம் இருப்பதே நோன்பு என்பதாகும். இந்த பாக்கியம் முஸ்லிம்கட்கு மட்டுமே கிட்டும். இதர மதங்களில் இப்படிப்பட்ட பரிபூரண உண்ணுவிரதம் கிடையாது.

இங்ஙனம் 30 நாள் ரமலான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று முடிந்ததும் மற்றொரு முறை அந்த முஸ்லிம் பக்தன் மாலை நேரத்தில் மேற்கு வானத்தை, இயற்கை அற்புத இஸ்லாமிய தீன் அடையாள மாகிய இளம் பிறையை காணத் துவங்குகிறான். இது ஈதுப் பிறை என்னும் சந்தோஷச் சின்னமாகும்.

ஈதுப் பெருநாள் பிறையைக் கண்டதும் அந்த முஸ்லிம் பக்தன் தன்னுடைய புனிதமாகிய நோன்பு விரதமும், தராவீஹ் வணக்கமும் குர்ஆன் வேதத் திலாவத்தும் ஒரு வகையில் 'சம்பூர்ணம்' அடைந்து விட்டதென்று மட்டில்லா மகிழ்ச்சி யடைகிறான்.

மறுநாள், உலக முஸ்லிம்கள் எல்லோருக்குமே, (நோன்பு நோற்காதார், தராவீஹ் தொழுதார், தொழாதார், குர்ஆன் ஓதினர், ஓதாதார்) சிறியோர், பெரியோர், குழந்தைகள் எல்லோருக்கும் மங்களகரமான புனிதப் பெருநாளுகும். இதை "ஈதுல் பித்ர்" (பித்ராப் பெருநாள்) என்று அழைக்கின்றோம்.

அன்று, குளித்து முழுகி, மணம் பூசி, நல்ல உடை பூண்டு சுத்தமாய் விளங்குவதோடு, நல்ல உணவும் உண்டு மகிழ்வதோடு, அன்பர்களையும் உறவினர்களையும் சந்தித்து 'முபாரக்பாத்' சொல்லி வாழ்த்திக் கொள்வதோடு, மற்றொரு முக்கிய காரியமும் நிறைவேற்று வான் நல்ல முஸ்லிம் அதாவது ஒரு சாதாரண குடும்பத்துக்கு ஒரு வேளை ஆகாரத்துக்குப் போதுமான தானியத்தை ஒரு ஏழைக்கு 'பித்ரா' என்ற பெயரால் தானம் அளிப்பான்.

இப்படி நோன்பு நோற்று, குர்ஆன் ஓதி, தராவீஹ் தொழுது பித்ரா கொடுத்து ரமலான் ஷரீபை நன்முறையில் கொண்டாடினவ னுக்கு ரமலான் மாத நோன்பின் புனிதப் பெருநாள் பாக்கியம் உண்டாகட்டும்.

ஈது முபாரக்! ஈது முபாரக்!

---


## மஜ்மூஉ மவ்லூது

இதில் றஸூலுல்லாவுடைய மவுலூதும், அதன் துஆக் களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத் தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அத புகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரி சைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மழை பைத்து, பீஹாப்பி ஸையிதின பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் எழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப் பட்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது

விலை அணு. 15

ஷை மூன்று மௌலூதும் அறபியில் கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. விலை ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# தாரீகுல் குலபா

## இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமை யாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாமின் ஆரம்பமும், இஸ்லாத்தை நிலை நாட்டிய தத்துவங்களும், இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும், இஸ்லாத்தின் சமத்துவங்களும், இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும் ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற் பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 8-பேஜ் ஸைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ. 1—8—0

மேற்படி இரண்டாவது பாகம்: இதில் ஹஜரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப் பெற்றது. விலை ரூ. 1—4—0

ஷை மூன்றும் பாகம்: இது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாபத்தும், ஹஜ்றத் அலி (ரலி) அவர்களின் கிலாபத்தும், ஹஜ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும் ஆக 5-கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியது. விலை ரூ. 1—4—0

ஷை மூன்று பாகமும் சேர்ந்தது விலை ரூ. 3—8—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ.20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

(7-வது பகுதி)

பண்டை அரபு நாட்டு வள்ளல்

# ஹாத்திம் தாயீ வாழ்க்கை வரலாறு.

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

## ஸபாஞவின் ஸிபாரிஷ்!

**ஹா**த்திமின் உத்தம புத்திரி ஸபாஞவின் விவரத்தைப்பற்றி மேற்படி சம்பவத்தையே விளக்கியே வேறு சில விபரங்களும் தொடர்ந்து கூறப்படுகின்றன. இந்த ரிவாயத்துகள் பின்வருமாறு:—

ஸபாஞ, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் ஆசிர்வதிக்கப்பெற்று சுதந்தரம் கிடைக்கப் பெற்ற பின், அம்மாதின் உள்ளத்தில் உத்தம கருத்தொன்று உதித்தது. "தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதே அக்கருத்து. "நான் யாருடைய புத்திரியோ அவருடைய குணமன்று இது; என் கூட்டத்தாரும் தோழர்களும் அடிமைத்தளை பூண்டு, பிறர்பால் கட்டுண்டு கிடக்க, நான் மட்டும் விடுதலை பெற்று சுயேச்சையாய் திரிவதா? என் நேச மித்திரர்களெல்லோரும் அஞ்ஞான மென்னும் காரிருள் சாகரத்திற் சிக்கித் தவிக்க, நான் மட்டும் கரை சேர்ந்து ஜோதி மயமான உலகில் உலவுவதா? என் தந்தை ஹாத்தீம் இப்படிச் செய்வாரா? அங்ஙனமிருக்க, நான் இத்தகைய சுயநலம் கருதலாமோ" என்ற கருத்தை லோகதயாளர் நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்கள் திருச் சமுகத்தில் எடுத்தோதி, சிபாரிஷ் செய்து கொண்டாள் ஸபாஞ.

தந்தைக்கு (ஹாத்திமுக்கு) இருந்தது போன்ற உதாரதன்மை அவரது புத்திரிக்கும் (ஸபாஞவுக்கு) பிரதிபலித்து விளங்குவதைக் கண்டு நபிமுஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அகமகிழ்ந்து அல்லாஹ்வைத் துதித்தார்கள். ஸபாஞவின் சிபாரிஷுக்கிணங்கி ஸபாஞவுடைய தோழர்களும் நேசர்களுமான தாயீ குலத்தார் அனைவரையும் சிறைத்தளையி னின்று விடுவிக்க உத்தர விட்டு விட்டார்கள்.

அப்போது ஸபாஞ, நபிகள் பெருமானுரை நோக்கி, "என் ஆன் மார்த்த பிதாவே, நாங்களெல்லோரும் தங்களுடைய தாஸர்கள்; தங்கள் ஆசிர் மொழி என்றென்றும் எங்கள் பால் நிலைத்திருக்கக்கடவது. தங்கள் துஆவுக்கு நாங்கள் உரியவர்கள். நாயகமே, நானும் தங்கள் ஹக்கில் துஆ செய்ய விரும்புகிறேன்.

"சர்வேஸ்வரனுகிய அல்லாஹ், தங்களுடைய நற்போதங்களை யும் நல்வழிகளையும்—அவற்றிற்கு யார் யார் உரியவர்களோ அவர்கள்

வரை எற்றிவைப்பானாக. ஆண்டவன் தங்களை யார் முன்னும் எந்த துர்த்தன் முன்னும் கெஞ்சவேண்டிய சந்தர்ப்பத்தை உண்டாக்கா திருப்பானாக. உரிமைகளும் அருளும் பறிபட்டுப் போனவர்கட்கு தங்கள் பொருட்டால்—தங்கள் வாயிலாய் அவ்வுரிமைகளும் அருட் பாக்கியங்களும் மீண்டும் கிடைப்பதாகுக. தங்கள் கருணைச் சாயை யிலே என்றென்றும் நாங்கள் நிழல் பெற்று சுகம் பெருவோமாக" என்பது ஸபானாவின் பிரார்த்தனைக் கவியின் கருத்து.

இதனை ஏட்டில் எழுதிவைத்துக்கொள்ளும்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தம் சகாக்களுக்கு கட்டளை யிட்டார்கள். அவ்வாறே செய்யப்பட்டது. பின்னர் ஸபானா விடைபெற்றுச் சென்றாள்.

## அண்ணனுக்குப் போதனை.

உத்தமி ஸபானா, இஸ்லாத்தின் பேரருளாகிய ஈமான் என்னும் ஞான ஒளியை ஹிருதய கமலத்தில் இறுத்திய வண்ணம், தன் ஊர் (ஷாம் தேசம்) போய்ச் சேர்ந்தாள். சிறைப் பிடிப்பினின்றும் விடுதலைப் பெற்றிருந்தும், அயல் நாடு விட்டு தன் நாடு வந்து சேர்ந்திருந்தும், அவர்களுக்கு மன நிம்மதி கிடைக்க வில்லை. ஏனெனின், தன் சிபாரி ஷின் பேரில் தாயீ குலத்தார் யாவர்க்கும் விடுதலையும் ஞானசாதன மும் கிடைத்திருக்க, அவர்களில் ஒருவனான தன்னுடைய சகோதரன் மட்டும் அப்பாக்கியம் பெறாது ஓடி ஒளிந்துத் திரிவது அவளுக்குப் பெரும் லஜ்ஜையாகத் தெரிந்தது. எனவே, தன் அண்ணனை தேடிப் பிடித்து கரைசேர்க்க வேண்டு மெனத் துணிவு கொண்டாள்.

ஸபானா, ஷாம் தேசத்தி லிருந்து "தூமத்துல் ஜுந்தல்" என்ற ஊருக்குப் போய், அங்குதன் சகோதரனைக் கண்டு ஸலாம் செய்தாள்.

அதீ:—ஸபானா, என் தங்கையே! உன்னையும் நம் கூட்டத்தாரை யும், மதீனாவிலிருந்து வந்த அந்த முஹம்மதுடைய வீரர்கள் சிறை பிடித்துக் கொண்டு சென்று விட்டன ரென்று கேள்விப் பட்டேன்; நீ எப்படி தப்பி வந்து விட்டாய்? நம் குலத்தார்களின் கதியென்ன?

ஸபானா:—ஆம். அவர்கள் எங்களை சிறைபிடித்துத்தான் சென் றார்கள். இங்ஙனம் தங்களைப்போல் ஓடி ஒளிந்து, அயோக்கியர்துன் மார்க்கர் என்ற பெயரெடுத்துச் சுயேச்சையாய் திரிவதைவிட, அந்த ஞான சீலர்-லோக தயாளர், அருள்வள்ளல் அஹ்மத் நபியுடைய திருச்சமுகத்தில் ஆயுளெல்லாம் அடிமையாய் கிடந்து சேவிப்பது எத்துணையோ சிலாக்யம். அந்த அருள் மூர்த்தி முஹம்மதை நீவிர், என்ன வென்று எண்ணிக் கொண்டிருக்கிறீர் ? அவர் கொடுங்கோன் மன்னரல்ல ; அட்டூழியம் புரியும் அதிகாரியல்ல. நம்மவரைப் போலவே அவரும் இருக்கிறார். அவர் சமுகத்தில் உயர்வு தாழ்வு கிடையாது.

தனவான் ஏழை என்ற வித்தியாசம் கிடையாது. எளியோரையும் அனாதைகளையும் அவர் அன்புடன் ஆதரித்து ரக்ஷிக்கின்றார். அடிமைகளை விடுதலை செய்கின்றார்; பெண் பாலர் மீது அளவற்ற பச்சாதாபம் கொள்கின்றார். அஞ்ஞானிகளை மெஞ்ஞானத்தின் பக்கல் அழைக்கின்றார். இருளில் கிடந்துழல்வோருக்கு ஜோதியின் பக்கம் வழி காட்டுகிறார். நீவிர் அவருக்கு எத்தனை இடையூறு செய்தவரா யிருப்பினும் உம்மையும் அவர் மன்னித்து விடுவார். வா, அவரிடம் போய் கடைத் தேறுவோம்.

அதீ :—என்ன ஆச்சரியம்! அந்த முஹம்மத் அத்தனை உத்தமரா? கொடும்பாவியாகிய என்னையும் அவர் மன்னித்து விடுவாரா? எனக்கும் அவர் சன்மார்க்கம் காட்டி உபதேசித் தருள்வாரா?.

ஸபானு : ஆம்! அவர் லோகத்துக்கே தயாளர். ரஹ்மத்துன் லில் ஆலமீன்! உன்னை அவர் வரவேற்பார். அணுவத்தனை அவமானமும் உனக்கு நேராது. வா, என்னுடன் போவோம். வா !

அதீ :—இதோ, இப்போதே வருகிறேன் !

உத்தமி ஸபானு, தன் சகோதரன் அதீயை, நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் திருச்சமுகத்திற்கு அழைத்து வந்து ஒப்படைத்தாள். அகதியை ஆதரிக்கும் அஹ்மத் நபியவர்கள், அதீவுக்கு அருள் பாலித்தார்கள். அக்ஷணமே அதி, அண்ணலவர்கள் (ஸல்) சமுகத்தில் மன்னிப்புக் கோரி, மனம் உருகி நின்றான். நபிகள் நாதர் (ஸல்) அவனுக்கு விடுதலையையும் ஞான போதனையையும் ஒருங்கே அருள் பாலித்தார்கள். இஸ்லாத்தின் நல்வழியில் அவனை அழைத்துக் கொண்டார்கள். முஸ்லிம்களின் கடமை, சகோதரத்வம், வணக்கம், ஒழுக்க முறை ஆகியவற்றையும் அவனுக்குப் போதித்தார்கள்.

தங்கை ஸபானுவைப் போல், அண்ணன் அதீயும் ஈமான் கொண்டு அத்யந்த முஸ்லிமாய், ஸமூகத் தொண்டாற்றி, எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திருவடி நிழலிலேயே இருந்து சேவித்து வாழ் நாட்களை கழித்து வந்தார்.

## ஹாத்தீம் தாயி முஸ்லிமா ?

ஹாத்திம் தாயீ, ஆண்டவன் திருத்தூதராய் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், இத்தரணியில் தோன்றுவதற்குப் பல ஆண்டுகட்கு முன் வாழ்ந்திருந்து மரித்துப் போனவர். ஆகவே அவர் முஸ்லிமா யிருந்திருக்க முடியா தென்றும் அவரை முஸ்லிமாய் கருதக்கூடா தென்றும் ஒரு சாரார் கூறுவர்.

ஆகவே, ஹாத்திம் தாயி முஸ்லிமா ? இல்லையா ? என்ற விவாதம் நெடுங் காலமாகவே இருந்து வருகிறது.

ஹாத்திம் தாயீ, முஹம்மத் நபியின் திருப் பெயர் சொல்லி ஈமான் கொள்ளவில்லை யென்பது வாஸ்தமே. ஆனால் பிற்காலத்தில் முஸ்லிம்களுக்கு என்னென்ன லக்ஷணங்களும் குணாதிசயங்களும் இருக்க வேண்டு மென்று போதிக்கப்பட்டனவோ, அவை யெல்லாம் பரிபூர்ணமாய் உடையவராய் விளங்கினார். ஆகையினால் தான், நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள், ஹாத்திமின் புத்திரி ஸபானாவின் வாய்மொழி மூலம், தந்தையின் ஒழுக்க வழக்கங்கள் பற்றிய வரலாற்றை ஆவலோடு கேட்டறிந்து "ஒரு முஸ்லிமுக்கு இருக்க வேண்டிய தன்மை யெல்லாம் அவரிடம் பொருந்தி யிருந்தன; ஆகவே அவர் அல்லாஹ்வின் நல்லடியார்" என்று சாக்ஷியம் பகர்ந்துள்ளார்கள்.

ஹாத்திம் தாயீ தர்க்க ரீதியாய் முஸ்லிம் அல்லவாயினும், ஆத்மார்த்த ரீதியாய் அவர் இக்காலத்து முஸ்லிம்க ளெனப்படுவோர்களைக் காட்டினும் ஆயிரம் பங்கு நல்ல முஸ்லிம்-பக்கா முஸ்லிம்-உண்மை முஸ்லிம் என்பது எமது திட்டமான அபிப்பிராயம்.

அஸ்ஸலாமு அலா மனித்தபா அல்ஹுதா! வஸ்ஸலாம்.


## ஸீரத்துல் பாறூக்

இதாகிறது நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய இரண்டாவது கலிபாவாகிய உமர் இப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சரித்திரம்.

இதில் அவர்களுடைய பிரபல்யங்களும, கீர்த்திகளும், வீரியங்களும், யுத்த சாமார்த்தியங்களும், தீனில் வழுவாது நடக்கும் நீதிகளும், அடங்கி யிருக்கின்றன. எல்லா முஸ்லிம்களுக்கும் அவர்களுடைய மகிமை புலப்பட்டிருப்பதால் நாமதை இங்கு விவரித்தெழுதவில்லை. இச்சரித்திரம் வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கு மென்பதில் ஐயமில்லை, இது இரண்டு பாகமாகும். முதற் பாகத்தில் அவர்களுடைய சரித்திரங்களும், இரண்டாம் பாகத்தில் அவர்களுடைய நீதிகளும் அடங்கி யிருக்கின்றன.

இரண்டு பாகமும் சேர்ந்தது விலை ரூ. 3

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ, 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இரத்தச் சின்னம்.

## (தொடர் கதை 13—வது பகுதி)

### 26-வது அத்தியாயம்

குலோரியா ஏதோ கடிதம் எழுதிக் கொண்டிருக்கும் போது, தனது அறைக்கு யாரோ வந்ததாகத் தெரிந்து, நிமிர்ந்து பார்த்தாள். அங்கு வந்த ஜேன் குலோரியா தங்கி யிருக்கும் அறையை மிக ஆச்சரியத்துடன் சுற்றிப் பார்த்து, "ஆஹா! என்ன அழகான அறை, எனது ஸ்மித்தை விட நீ கெட்டிக்காரி" என்றாள்.

"நல்லது! உனது கெட்டிக்கார ஸ்மித் என்ன செய்கிறான்?" என்று குலோரியா கேட்டாள்.

உடனே ஜேனின் முகம் மாறியது. "இதைப் போல் கேவலமாக எனது ஸ்மித்தைப் பற்றிக் கேட்காதே. நீ மாட்டி யிருக்க வேண்டிய கஷ்டத்தில் அவன் மாட்டி யிருக்கிறான். நீயும் அவனுடன் சேர்ந்திருந் தாய்" என்று கோபத்துடன் சொன்னாள் ஜேன்.

"பயித்தியக்காரி மாதிரி உளராதே. உட்காரு"

ஜேன் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே, அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்து "நான் ஸ்மித்தைப் பற்றி தான் பேச வந்தேன். ஏதோ கொலை குற்றத்தை அவன் பேரில் சுமத்துவதாக கேள்விப் பட்டேன். அவன் யாதும் கொலை செய்ய வில்லை யென்று உனக்குத் தான் தெரியுமே" என்றாள்.

"எனக்குத் தெரியுமா! எனக்கு எப்படித் தெரியும்? அவன் அன்றிரவு அந்த வீட்டி லிருந்ததும் எனக்குத் தெரியாதே, மறுநாள் பத்திரிகையில் பார்த்த பின் தான் எனக்கும் தெரியும்" என்று விடை யளித்தாள்.

"குலோரியா! நான் உன்னிடம் சண்டை போட வரவில்லை."

"அதைப் பற்றி சந்தோஷம். நாமிருவரும் சண்டை போட என்ன யிருக்கிறது?"

"சண்டை போட காரணம் ஏதும் உண்டோ, இல்லையோ, தற் போது முக்கிய சமாச்சாரம், நீ ஸ்மித்துக்காக என்ன செய்ய போகி றாய்? உனக்கோ பெரிய ஆசாமிக ளெல்லாம் பழக்கம். நீ ஸிம்ஸனுக்கு

வேலை செய்து வருகிறாய், ஸிம்ஸன் தான் இன்ஸ்பெக்டர் பென்டனை ஸ்டெயின் பிளேஸுக்கு போகுமாறு செய்தது. இன்ஸ்பெக்டர் பென்டன் ஒரு முட்டாள். ஸிம்ஸன் சொல்லாவிடில் அவனால் ஒன்றும் செய்ய முடியாது. நீ ஸிப்ஸனுடன் தானே யிருந்து வேலை பார்த்து வந்தாய்?'' என்று ஜேன் கேட்டாள்.

"எனக்கு சிறிப்பு உண்டாக்காதே. நானென்னமோ ஸிம்ஸனிடம் தான் வேலை பார்த்து வருகிறேன். என்ன வேலை! டைப் அடிக்கும் வேலையும் மேஜையை துடைத்து, அறையை சுத்தமாக வைக்கும் வேலையும்! அவர்கள் என்னென்ன செய்கிறார்கள், என்ன செய்யப் போகிறார்களென்று எனக்கு எப்படித் தெரியும்? தற்போது ஸ்மித்துக்காக நானென்ன செய்ய வேண்டும்?''

"நீ, இன்ஸ்பெக்டர் பென்டனிடம் போய் ஒரு கட்டுக் கதையை சொல்லு. நான் எல்லாம் யோசனை செய்து இருக்கிறேன். நீ போய் நீ ஸ்மித் இடம் மிக சிநேகமாக இருந்ததாகவும் அவ்வீட்டிற்கு அவனுடன் நீயும் சென்றதாகவும் சொல்லு'' என்று ஜேன் சொன்னாள்.

"சரிதான் அப்படி சொன்னால் எனக்கு என்ன தான் மதிப்பு! இந்த கட்டுகதை யெல்லாம் வேண்டாம். ஆனால் இன்று காலை சிம்ஸன் என்னிடம் சொல்லியதி லிருந்து ஸ்மித் பேரில் யாரும் கொலை குற்றம் சுமத்துவதாக தெரியவில்லையே'' என்று குலோரியா பதில் சொன்னாள். அதற்கு ஜேன் ஒன்றும் சொல்லாமல் எழுந்து அந்த அறையினுள்ளேயே ஏதோ யோசித்து கொண்டே இங்கும் அங்கும் நடந்தாள்.

"அதுவுமல்லாமல் உனது ஸ்மித்துக்கும் எனக்கும் என்ன சம்மந்தம்? அவனுக்காக நான் பரிந்து பேசவேண்டிய காரணம் யாது?'' என்று குலோரியா கேட்டாள். இதை கேட்டதும் ஜேன் மிக கோபம் அடைந்து இடுப்பின் மேல் கையை வைத்துக் கொண்டு குலோரியா முன் நின்று உற்று நோக்கி "ஏன் பரிந்து பேச வேண்டுமா! சொல்கிறேன் கேள். மாரிஸ் கேஸ் கோர்ட்டுக்கு வரட்டும். நான் சாட்சி கூண்டில்ஏறி உனது வண்டவாளத்தை யெல்லாம் சொல்லி விடுகிறேன். நீ பேங்கில் எவ்வாறு திருட்டுத் தனமாய் பணம் எடுத்தாய் என்பதையும் தெரிவித்து விடுகிறேன். சமாசாரம் சொல்லும் போதே உன் உடம்பெல்லாம் நடுங்குகிறதா'' என்று கோப உற்சாகத்துடன் சொன்னாள்.

"மாரீஸ் கேஸா? எப்படி? மாரீஸை பிடித்து விட்டார்களா?'' என்று குலோரியா மெதுவாக கேட்டாள்.

"இன்று இரவுதான் பிடித்தார்கள். இன்ஸ்பெக்டர் பென்டன் பிடித்தார். எனக்காக ஸ்மித் ஏதேனும் பணம் கொடுத்திருப்பான்

என்று விசாரிக்க போலிஸ் ஸ்டேஷனுக்கு சென்றிருந்தேன். அப்போது தான் மாரீஸை கொண்டு வந்தார்கள்."

"மாரீஸ் ஓர் கைதியா! அய்யோ பாவம்" என்று மெதுவாக குலோரியா சொன்னாள். ஜேன் அவளை முறைத்து பார்த்து கொண்டே இருந்தாள். அவளுக்கு குலோரியாவைப்பற்றி வெறுப்பும் கோபமும் ஒரு புறம் இருக்க பயமும் இருந்தது.

குலோரியா ஜேன் பக்கம் திரும்பி "ஸ்மித்திற்கு என்னால் இயன்ற உதவியை செய்ய முயற்சிக்கிறேன். நீயேதோ கோர்ட்டில் போய் பிதற்றுவாய் என்று பயமுறுத்துகிறாயே அதற்காக பயந்து நான் உதவி செய்வதாக சொல்லவில்லை. பாவம் ஸ்மித்து கொலை செய்ய வில்லையென்று எனக்கு தெரிந்தது தான் காரணம். காலையில் ஸிம்ஸனுடன் கலந்து பேசுகிறேன். எனக்கு தெரிந்தவரை சொல்லி காப்பாற்ற முயற்சிக்கிறேன்" என்று சொன்னாள்.

"அதுபோதும் குலோரியா" என்று சிறு சந்தோஷத்துடன் சொல்லி கொண்டே அவ்வறையிலுள்ள உயர்தரமான சாமான்களை ஆச்சரியத்துடன் ஒவ்வொன்றாக பார்த்தாள். குலோரியாவும் தான் வசிக்கும் இடம் பூராவும் ஒவ்வொரு அறையாக காண்பித்தாள். ஒரு அறை மூடப்பட்டு இருக்கவே அது என்ன அறை என்று ஜேன் கேட்டாள். குலோரியா அது சமயலறை என்று சொன்னாளே தவிர திறந்து காட்டவில்லை ஜேன் சந்தேகத்துடன் "உள்ளே ஏதும் சிநேகிதனை வைத்து இருக்கிறாயா" என்று சொல்லி கொண்டே குலோரியா தடுப்பதற்குள் கதவை திறந்து உள் சென்றாள். உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஆனால் யாரும் இல்லை. யாரும் இல்லாததால் ஏமாற்றம் அடைந்த ஜேனை பார்த்து குலோரியா சிறிது சிரித்தாள். ஆனால் அச்சிரிப்பு அதிக நேரம் இருக்கவில்லை. ஏனெனில் அதற்குள் உள்சென்ற ஜேன் அங்கு மூலையில் அடுக்கப்பட்ட சாமான் களுள் ஒரு சிறிய புட்டியை எடுத்து இது என்ன என்றாள். ஜேன் கேட்டுக் கொண்டே அந்த புட்டியில் ஒட்டிய லேபிலை படித்தாள். மயக்க மருந்து என்று எழுதி இருந்தது. உனக்கேன் மயக்க மருந்து என்று கேட்டாள்.

குலோரியா பதில் சொல்ல தயங்கியபின் "உனக்குதான் தெரியுமே நமது ஸ்மித் ஜெயிலில் இருப்பது. அவனைப்பற்றி நினைத்து சிறிது கவலை வந்தால் இதை கொஞ்சம் முகர்ந்து கொள்வேன்" என்று வேடிக்கையாக சொன்னாள். ஜேன் இதை கேட்டதும் கோபத்துடன் கையிலிருந்த புட்டியை டக்கென்று கீழே வைத்து "உனக்கு திமிர் அதிகமாகி விட்டது. நீயாரிடமாவது மாட்டி கொண்டு திகைக்க போகிறாய்" என்று சொல்லி கொண்டே அவ்வறையை விட்டு வெளி சென்றாள்.

## 27–வது அத்தியாயம்

டாம் ஹேறால்ட், மாரீஸை பிடிக்கப்பட்டதைப்பற்றி கேள்வி பட்டு, நேராக போலீஸ் ஸ்டேஷனுக்கு பென்டனைப் பார்க்கச் சென் ருன். அங்கு அவரில்லை. அவர் தனது வீட்லிருப்பதாக போலீஸ் ஸ்டேஷனில் தெரிவித்தார்கள். மாரீஸ் பிடிக்கப்பட்டதைப்பற்றி டாமுக்கு ஸிம்ஸன் டெலிபோன் மூலம் தெரிவித்திருந்தார்.

டாம் அங்கிருந்து பென்டன் வீட்டிற்குச் சென்ருர். இதுவரை பென்டன் டாமிடம் எத்தனையோ முறை சந்தித்துப் பேசியும், தனது குடும்பத்தைப்பற்றி ஒரு வார்த்தையும் சொன்னதில்லை. அதனால் பென்டனுடன் யார் தங்கி யிருக்கக் கூடுமென்றே யோசித்துக்கொண்டு டாம் நடந்தான். இன்ஸ்பெக்டர் வீடு எது என்றும் அவனுக்குத் தெரியாது. இவ்வாறு யோசனையில் நடந்து செல்லும்போது ஜன நடமாட்டமில்லாத ஒரு தோட்டத்தைக் கடக்கநேரிட்டது. அத்தோட் டத்தில் செல்லும்போது, தனது பின்னால் யாரோ நடந்து வருவதாக காலடி சப்தம் கேட்டது. திரும்பிப்பார்த்தான். யாரையும் காணும்: பிறகு சிறிது வேகமாக நடந்தான். பின்னால் காலடி சப்தம் கேட்க வில்லை. அதனால் திரும்பி பார்த்தான். சிறிது தூரத்தில் ஒரு மனிதன் புற்பூமியின்மேல் நடப்பதைக் கவனித்தான். டாம் நின்ற தும் அவனும் நின்ருன். அவனிடம்போய் ஏன் தன்னை தொடர்ந்து வருவதாக கேட்கலாமோவென்று டாம் நினைத்தான். ஒரு மனிதன் தோட்டத்தில் உலாவுவதைப் பார்த்து ஏன் அங்கு நடக்கிருய் என்று கேட்பது ஒழுங்காக இல்லை என்று நினைத்து முன் நடக்க ஆரம்பித் தான். முன்னால் யாரோ வருவதைப் போல் தெரிந்தது. நன்ருக கவனிக்க ஒரு போலீஸ் கான்ஸ்டேபிள் வந்தான். போலீஸைப் பார்த்த தைரியத்தால் டாம் திரும்பி பார்க்க, பின்னால் வந்தவனைக் காணும். போலீஸிடம் பின்னால் தொடர்ந்து வந்தவனைப்பற்றித் தெரிவிக்காமல், இன்ஸ்பெக்டர் பென்டன் வீடெங்கே, என்று கேட் டான். அவன் விபரமாக சொல்ல, டாம் ஒரு டாக்ஸி காரில் ஏறி இன்ஸ்பெக்டர் வீட்டிற்குச் சென்ருன்.

கதவைத் தட்ட பென்டனே கதவைத் திறந்தார். டாமைப்பார்த் ததும் "வாரும் நான் இப்பொழுதுதான் வந்தேன். இரவு சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். உனது சாப்பாட்டு வேலை முடிந்து எவ்வளவோ நேரமாயிருக்கும்"

"நான் உங்களுக்கு கஷ்டம் கொடுத்து தொந்தரவு செய்யவர வில்லை. மாரீஸ் அகப்பட்டதாக கேள்வி பட்டேன். அவ்விஷயமாக விசாரிக்கலா மென்று வந்தேன்"

பென்டன் டாமை, தனது சாப்பாட்டு அறைக்கு கூப்பிட்டு செல்லும்போது திடீரென்று நின்று, "டாம்! தயவு செய்து சிறிது இங்கேயே இரும். உள்ளே எனது மாமியிருக்கிருள். ஒரு கிழவி. அவளுக்கு வெளியிலிருந்து யார் வந்தாலும் பிடிக்காது. அவளுக்கு தெரிவித்து வருகிறேன். எனது மனைவி இறந்தது உனக்குத் தெரியுமே அதற்குப்பின் இவள் தான் என் வீட்டு வேலைகளை கவனித்து வருகிருள்" என்று சொல்லி, அங்கேயே டாமை இருக்க வைத்து பென்டன் சாப்பாட்டு அறைக்கு போய் கதவை மூடிக்கொண்டார். ஒன்றிரண்டு நிமிஷங்களுக்குப் பின் கதவை திறந்து, "உள்ளே வாரும். நிற்பாட்டி கஷ்டம் கொடுத்ததைப்பற்றி மன்னிக்கவும்" என்றுர்.

டாம் உள்சென்று பார்க்க, மேஜையின் பேரில் இன்ஸ்பெக்டரின் சாப்பாடு வைக்கப்பட்டிருந்தது. இன்ஸ்பெக்டர் சாப்பிட்டு முடியும் தருவாயில் தான் வந்து கதவை தட்டவே, அவரே எழுந்து கதவை திறந்திருக்கிருர். அறையில் எல்லா சாமான்களும் அழகாகவும் ஒழுங்காகவும் வைக்கப்பட்டிருந்தன.

அந்த கிழவி டாமைப் பார்த்து "அறை ஒழுங்கில்லாமலிருப்பதைப் பற்றி ஒன்றும் நினைக்கவேண்டாம். என்னல் தாயார் வைத்திருந்தபடி ஒழுங்காக வைக்கமுடியவில்லை" என்றுள்.

அதற்கு இன்ஸ்பெக்டர் "அவ்வாறு ஒன்றுமில்லை. எல்லாம் ஒழுங்காகத்தானிருக்கிறது" என்று சொல்லி, டாமைப்பார்த்து "நீ என்ன விசாரிக்க வந்தாய்?" என்று கேட்டார்.

"இரத்த சின்ன சங்கத்தைப் பற்றிதான். தற்போது மாரீஸ் அகப்பட்டதால், இதைக்கொண்டு இரத்த சின்ன சங்கத்தைப் பிடிக்க ஏதும் வசதி ஏற்பட்டதோ?"

"சரிவர தெரியவில்லை. மாரீஸ் அகப்பட்டது ஒரு வழியில் நல்லதாகவே தோன்றுகிறது. அவரைக் கவனிக்க ஒருவனை பிரத்தியேகமாக ஏற்படுத்தியுள்ளேன். மாரீஸ் இருக்கும் அறைக்கு யாரும் செல்லக் கூடாதென்றும் உத்தரவிட்டிருக்கிறேன்"

"ஓஹோ! கப்பலில் வேலை செய்துவந்த சார்லிக்கு பாஷாணம் கொடுக்கப்பட்டதை நினைத்துக் கொண்டீர்களோ"

இன்ஸ்பெக்டர் தலையை யசைத்துக் கொண்டே "ஆம்! சார்லி இறந்ததும் ஒரு பெரிய மர்மமல்லவா?" என்று சிறிது சிறித்துக் கொண்டே சொன்னர்.

"ஆம் சார்லி இறந்தது பெரிய மர்மம்தான். அதைச் சொல்லும் போது ஏன் சிறிக்கிறீர்கள்?" என்று டாம் கேட்டான்.

" இரத்த சின்ன சங்கத்தை பிடிப்பதற்கு மாரீஸ் அகப்பட்டதை விட, சார்லி இறந்த மர்மம்தான் மிகவும் உபயோகமாக யிருக்கப்போகிறது என்று என் மனதிற்கு தோன்றுகிறது" என்றார்.

" உங்களுக்கு இரத்த சின்ன சங்கத்தைத் தவிர வேறு சமாச்சாரம் எதும் பேச கிடைக்கவில்லையா? இந்த பயங்கரமான சங்கத்தைப் பற்றி பேசினது போதும். எனக்கு பயமாக யிருக்கிறது. தாயாருக்கு நீங்கள் இவ்வாறு பேசுவது பிடித்திருக்கலா........." என்றாள் அங்கிருந்த கிழவி.

" மாமியாரே மன்னித்துக்கொள். நாங்கள் எங்கள் பேச்சை நிற்பாட்டி விட்டோம்" என்றார் இன்ஸ் பெக்டர்.

அக்கிழவி அவ்வறையை விட்டு போனதும் " தாயார் தயார் என்றால் யார்? உமது தாயாரா?" என்று டாம் கேட்டான்.

" இல்லை. எனது பாட்டி. அவள் தற்போது இங்கு தங்கவில்லை" என்று இன்ஸ் பெக்டர் பதிலளித்தார்.

## 28-வது அத்தியாயம்

இன்ஸ்பெக்டருக்கு வயது சுமார் 50 இருக்கலாம். டாம் தம் மனதிற் குள்ளேயே, இவருடைய பாட்டியின் வயது எவ்வளவாக யிருக்குமென்று யோசனை செய்தான். அதுவுமல்லாமல் அவள் இவ்வீட்டை ஒழுங்காக நடத்தக் கூடியவளாம்.

" உனது பாட்டி மிக திறமைசாலிபோல் தோன்றுகிறது. அவளுக்கும் இரத்த சின்ன சங்கத்தைப் பற்றி தெரியுமோ, அதைப்பற்றி எதும் சொல்வாளோ" என்று டாம் கேட்டான்.

" அவளுக்குத் தெரியுமாவா! எனக்கு இருக்கும் அதிகாரம் அவளுக்கு கொடுக்கப்பட்டால், இன்றே இரத்த சின்ன சங்கம் கூட்டம் போலீஸ் ஸ்டேஷனுள் இருப்பார்களே" என்றார்.

பிறகு, தான் இதுவரை இரத்தச் சின்ன சங்கத்தை பிடிக்காததைப் பற்றி போலீஸ் கமிஷ்னர் தன்னை குறைகூறுவதைப்பற்றி பேசிக்கொண்டிருந்தார். " கொலைக்குமேல் கொலை நடந்தால் கமிஷ்னர் தான் என்ன செய்வார். என்னதான் கண்டிக்கமுடியும். இந்த இரத்த சின்ன சங்கத்தின் தலைவன் ஒருவனுகயிருச்கலாம். அவன் யாரையும் நம்பமாட்டான். அவன் யாரென்றும் அந்த சங்கத்தின் அங்கத்தினர்களுள் யாருக்கும் தெரியாது. ஒரு அங்கத்தினருக்கும் மற்ற அங்கத்தினரைப்பற்றியும் தெரியாது. இவ்வாறுதான் இருக்கக்கூடும். அதனுல் தான் இதுவரை யாரும் அதைக்காட்டிக் கொடுக்க முன்வரவில்லை"

இவ்வாறு இன்ஸ்பெக்டர் பேசிக்கொண்டிருக்க, மணி 11½ ஆகி விடவே, "நேரம் அதிகமாகிவிட்டது. நான் போய் வருகிறேன்" என்று சொல்லி டாம் எழுந்தான். இன்ஸ்பெக்டரும் எழுந்து "வாயல் வரை நானும் வருகிறேன். உனது காரும் வந்திருக்கிறதல்லவா?" என்று கேட்டார்.

"இல்லை நான் டாக்ஸிகாரில் வந்தேன்" என்று டாம் சொன்னான்.

"அப்படியா! முன்னால் ஒரு கார் நின்றதை பார்த்த ஞாபகமிருக்கிறதே. இந்த தெருவில் யாருக்கும் கார் கிடையாதே. யாராவது டாக்டர் அக்கம் பக்கம் வந்திருக்கக் கூடும்" என்று சொல்லியவாறு இன்ஸ்பெக்டர் வெளிக்கதவைத் திறந்தார். அவர் சொல்லியபடி எதிரே ஒரு கருப்பு கார் நின்றது.

"இந்த காரை எங்கோ பார்த்த ஞாபகமிருக்கிறது" என்று இன்ஸ்பெக்டர் சொல்லியவாறு ஒரு அடி முன் வந்தார். திடீரென்று காரின் உள்புறம் இருட்டிலிருந்து ஏதோ நெருப்புச்சுடர் வெளிவருவதைப் போல் தோன்றியது. ஒரு வெடி சப்தமும் கேட்டது. இன்ஸ்பெக்டர், டாமின் கையில் சாய்ந்தவாறு கீழே விழுந்தார். மறுவினாடியில் எதிரே நின்ற கார் வேகமாக கிளம்பி மறைந்தது. அந்த தெருவிலுள்ளவர்களெல்லாம் என்ன சப்தமென்று கதவுகளைத் திறந்து வெளியே நோக்கினர். அருகே நடந்து போய் கொண்டிருந்த ஒரு போலீஸ் கான்ஸ்டேபிலும் சப்தத்தைக் கேட்டு ஓடி வந்து, அவனும் டாமுமாக இன்ஸ்பெக்டரைத் தூக்கி, உள்ளே சாப்பாட்டு அறைக்குச் சென்றனர்.

அங்கு இன்ஸ்பெக்டர் மெதுவாக கண்ணைத் திறந்து "ஆஹ்!" என்று வலியால் சப்தமிடுவதைப் போல் சப்தமிட்டு, தனது கையை கோட்டினுள் விட்டு உள்ளே உள்ள வெய்ஸ்ட் கோட்டைத்தடவி, ஒரு சிறிய ஈய சப்பையான துண்டை வெளியே எடுத்தார். இதைப்பார்த்ததும் டாம் ஆச்சரியமுற்று பேசமுடியாமல் நின்றான்.

"துப்பாக்கி ரவை பாதுகாப்பு வெய்ஸ்ட் கோட் அணிபவர் மூவர்களுள் முதலாவது இரத்த சின்ன சங்கத்தின் தலைவன். இரண்டாவது நான். மூன்றாவது குலோரியா. அவளை ஒரு முறை கவனிக்க சந்தர்ப்பம் வாய்த்தது:—அதனால்தான் அதுவும் தெரியும்" என்று இன்ஸ்பெக்டர் சொல்லியபின், ஏதோ யோசனை செய்தார்.

பிறகு டாமைப் பார்த்து ஸிம்ஸனுக்கு டெலிபோன் மூலம் தெரிவிக்குமாறு சொன்னார்.

சுமார் அரைமணி நேரத்திற்குப் பின் அவசரமாக ஓடிவந்தார் ஸிம்ஸன், பென்டனின் விஷயத்தை கேட்டதும். "உங்களை சுடுவதினால்

அவர்களுக்கு என்ன லாபம்? உங்கள் பக்கம் திரும்புவார்கள் என்று நான் நினைக்கவே இல்லை" என்று சொல்லியபின் தனக்கு தான்பேசுவது போல் மெதுவாக "அவள் எதற்கு கேட்டாள்?" என்று சொன்னார். பிறகு பென்டனைப் பார்த்து "அந்த குலோரியாவை பற்றிதான் நினைக்கிறேன். இன்று காலை அவள் உமது விலாசத்தை என்னிடம் கேட்டாள். நான் ஏதேதோ சொல்லி விலாசத்தை தெரிவிக்கவில்லை. ஆனால் எனக்கு தற்போது ஞாபகம் வருகிறது. எனது அறையில் டிராயரில் ஒரு சிறிய நோட்டுக்கில் சில முக்கிய விலாசங்களெல்லாம் எழுதி வைத்துள்ளேன். நான் இல்லாத சமயத்தில் அவள் அதை எடுத்து பார்க்கவும் கூடும்" என்று சொன்னார். இதைக்கேட்ட டாமின் முகம் மாறியது. கோபத்துடன் "மிஸ்டர் ஸிம்ஸன் பென்டனை சுட்டது குலோரியா என்று தாங்கள் நினைக்கிறீரோ. அது முற்றிலும் தவறு. அவளை மிக கெட்டவள் என்றும் அநேக சிறிய திருட்டு தொழில்களில் சம்மந்தப்பட்டவள் என்றும் நீங்கள் உடனே சொல்ல தயங்கமாட்டீர்கள். இதைக் கொண்டு பென்டனை சுட்டதும் அவள் என்று நீங்கள் நினைப்பது மிக தவறு" என்றான்.

"நீ சொல்லுவது சரிதான். சிறு திருட்டு தொழிலில் சேர்ந்த அவளை நேர்வழியில் திருப்பலாம் என்னும் எண்ணத்துடன் இருக்கும் நானே அவள் பேரில் சந்தேகப்படுவது ஒழுங்கல்ல" என்று சொல்லிய பின் தனது ஜேபியிலிருந்து ஒரு கார்டை எடுத்து இன்ஸ்பெக்டரிடம் கொடுத்த "இதை பாருங்கள்" என்றார். இன்ஸ்பெக்டர் அதை கவனித்து "இது உங்களுக்கு எப்போது கிடைத்தது" என்று கேட்டார். இது எனது கடித பெட்டியில் கிடந்தது. நான் இங்கு வருவதற்காக டேக்ஸி எதிர்பார்த்துக்கொண்டு இருக்கும்போது கடிதபெட்டியை பார்த்தேன். அதில் இதை கண்டதும் உங்களுக்கும் காண்பிக்கலாம் என்று கொண்டுவந்தேன்"

அந்த கார்டில் சிகப்பு வட்டம் போடப்பட்டிருந்தது அந்த குறியை பார்த்த டாமுக்கு உடல் நடுங்கியது. அதில் "நீ சேர்ந்திருக்கும் கூட்டம் தோல்வி யடையக் கூடியது. அதை விட்டு விட்டு எங்கள் சார்பில் உழைத்தால் உனக்கு பன்மடங்கு பலன் கிடைக்கும். இனியும் எங்களுக்கு எதிராக வேலை செய்வதை தொடர்ந்து நடத்தினால் மறு மாதம் 4ந் தேதி நீ இறப்பாய்" என்று எழுதி இருந்தது. அதை படித்த பென்டன் "இன்னும் 10-நாட்கள்தான் இருக்கிறது. 10த்தே நாள்" என்று ஆச்சரியமும் கலவரமும் கலந்தவாறு சொன்னார்.

"ஆம் இந்த பயமுறுத்தலுக்கு நான் சட்டை செய்யவில்லை" என்று சிரித்துக்கொண்டே ஸிம்ஸன் சொன்னார்.

"10-நாட்கள்—இதைபற்றி யேதாவது யோசனை செய்தீர்களா? மறு மாதம் 4ந்தேதி என்ன செய்ய யோசனை?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"நீங்கள் ஏன் அவ்வாறு பயந்து கேட்கிறீர்சள். எனக்கு ஒரு சிநேகிதன் ஒரு மோட்டார் போட்டு இரவல் கொடுப்பதாக சொல்லி இருந்தான். நான் அதில் மீன் வேட்டைக்குபோகலாம் என்று யோசனை செய்திருந்தேன்—ஆம் 4ந்தேதி அன்று மீன் வேட்டைக்குத்தான் போவேன்"

"நீங்கள் எங்கும் போங்கள் எதும் செய்யுங்கள். ஆனால் தனியாக போக நான் விடமாட்டேன். சரி நீங்களெல்லாம் தற்போது போகலாம். நல்லவேளையாக எனது மாமியாரும் எழுந்திருக்க வில்லை எனது தாயாரும் இங்கில்லை." இதை கேட்ட டாம் சிறித்து கொண்டே எழுந்தான். (தொடரும்.)


## மஜ்மூஉல் ஸலவாத்து

இப்புத்தகம் அல்லாஹு தஆலாவின் அஸ்மாவுல் ஹுஸ்னாவைப் பொதிந்த துஆ கன்சுல் அர்ஷும், இன்னும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேரில் எப்போதும் நேமமாய் ஒதி வருகிற ஸலவாத்துகளில் மிகவும் புகழானதும், மற்றும் ஸலவாத்துக் கெல்லாம் தாயானது மான உம்மு ஸலவாத்தும், இன்னும் அல்குத்புர் றப்பானீ வல்கௌதுஸ்ஸமதானீ முஹ்யித்தீன் அப்துல் காதிரி ஜைலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் கவ்திய்யா ஸலவாத்தும், இன்னும் செய்யிதினா குத்புல் அக்தாபு வகௌதுல் அஃபாபு ஜிந்தா ஷாஹ் மதார் பதீவுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் மதாரிய்யா ஸலவாத்தும், இன்னும் அநேக சில்லரை ஸலவாத்துகளும், துஆக்களும் ஒருங்கே சேர்ந்த அருமையான கிதாப். சுத்தத் தமிழில் சிறியதாய் பாக்கெட் புஸ்தகம் போல் கிளேஸ் காகிதத்தில் அழகாய் அச்சிட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை அணா. 15

ஷை அரபுத் தமிழ் அணா. 15

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# இஸ்லாத்தின் தன்மை!

எஸ். எஸ். அலாவுத்தீன்.

மக்களெல்லாம் அல்லாவின் பெயரைச் சொல்லி
மானிலம் செழிப்புற வணங்க வேண்டும்
துக்கங்கள் வந்தாலும் தொழுகையை நிறைவேற்றி
தூய்மையுடன் அவன் பாதம் போற்ற வேண்டும்

திக்கெட்டும் அவன் நாமம் திகழச் சொல்லி
தினந்தோரும் ஐந்து முறை தொழுதல் வேண்டும்
பக்கபலம் அவனிருக்க பயமொன்று மில்லை
பக்தர்களுக் கருள் புரிவதன் கடமையன்றோ?

இல்லார்க்கு உள்ளோர் ஈவதே நன்றென்று
இனிதாக எவர்க்கும் உதவுதல் வேண்டும்
நல்லோர்கள் சென்றவழி பொன் வழியென்று
நாயகம் போதித்த வழிபோதல் வேண்டும்

கல்லாதார் பேசும் நாத்திகம் பொய்யென்று
குழிபறித்தங்கதைப் புதைத்திடலும் வேண்டும்
எல்லோர்க்கும் மேலாக ஒரு வல்லோனிருக்க
எவர்தயவினி வேண்டும் சொல்வாய்?

தொழுகையில் தோளோடு தோள் நிற்கும் நீங்கள்
தொழுதபின் நிலைமாறி விடுவதேனோ?
பழுதற்ற பரிசுத்த வேதத்தைத் தழுவியும் உங்கள்
பாபத்தைப் போக்கும் வழி கொள்ளாத தேனோ?

விழுந்தோடும் பெரு நதி கடக்கும் பொருட்டங்கு
வழிகோல நீதிப்பால மங்கிட்டுக்க
பழுதற அதன் மீது செல்லாது நீங்கள்
பாப வெள்ளத்திலாழ்ந்து மடிவது மேனோ?

பாராளும் நாதனை பக்தி மிகப் போற்றி
படைத்தோனவன் நாமச் சக்தி மிகப் போற்றி
ஏராளமான புகழ்ப் பாமாலை சாற்றி
எண்ணிலா அவன் சக்தி வியந்து பாராட்டி

பாரோர்கள் அவன் பக்கம் கரங்களை நீட்டி
பண்பான அவனருள் கிடைக்கும்படி காட்டி
ஊரெல்லாம் நாடெல்லாம் உண்மை நிலை நாட்டி
உயர்வான இஸ்லாமதன் தன்மையினைக் காட்டுவீரே!




# நோய்களை நீக்கும் நாயகப் புகழ்மாலை.

(றஹ்மத்துல்லா மஆலி பாகவி)

"அல் பூபஸ்ரி இமாம்" என்ற பெயரை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லையா? அப்படியானால் "கஸீதா புர்தா" என்றுவது கேள்விப்பட் டிருப்பீர்கள்.

கஸீதா புர்தா என்பது நபிகள் நாயகம் முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மீது, பக்திப் பரவசத்தோடும் அபரிமிதமான விசுவாசத்தோடும், உள்ளமுருகி ஒரு பக்தர் பாடிய அரபு ஈரடிப்பாக்களின் ஒரு பாமாலையே யாகும். கஸீதா என்றால் பாமாலை என்றும், புர்தா என்றால் 'ஒற்றைப்பாடு' என்றும் பொருள்படும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் விசுவாசமுடைய முஸ்லிம் பாமரர்களும் பிரமுகர்களும் பலர், நம் தென்தமிழ் நாட்டிலும் வட நாட்டிலும், இந்த புகழ்மாலையை பக்தி விசுவாசத்தோடும், இனிய ராகத்தோடும் ஓதிப் படித்து வருவார்கள்.

பல பக்தர்கள், தாங்கள் எண்ணிய நல்லெண்ணம் ஈடேற வேண்டு மென்ற அபிலாஷையோடு அதை, நியமமாய்ப் படித்து வருகிறார்கள். பலர், தங்களுடைய 'முஹப்பத்' என்னும் பரமப் பிரேமையை எம்பெருமானார் (ஸல்) அவர்கள் புனித ஆன்மாவுக்கு அறிவித்து, அவர்களுடைய ஆசியையும் ஆண்டவனின் அருளையும் பெறுவான் வேண்டி, அக்கறையுடன் ஓதி, இகத்திலும் பரத்திலும் நன்மை அடைந்து வருகிறார்கள்.

## புகழ் மாலைப் பூ மலர்ந்த வரலாறு.

இந்த 'புர்தா' கஸீதா யாரால் இயற்றப்பட்டது? எதற்காக பாடப்பட்டது? எப்படி அது பொது ஜனங்களுக்குள் பரவியது? என்ற வரலாறு ஓர் அற்புதக் கதை போன்றதாகும். அதை நஞ்சிறுவர்கள் அபிமானத்துடன் படித்துப் பயன் பெறுவார்களாக:—

'அல்பூபஸரி' என்ற இமாம்தான் புர்தா கஸீதாவை இயற்றியவர். அந்த மகானின் முழுப் பெயர் "ஆரிபு பில்லாஹ், இமாம், ஸாலிஹ், ஷர்புத்தீன் அபூ அப்துல்லாஹி முஹம்மத் பின் ஹஸனில் பூஸரி

(ரஹ்மதுல்லாஹி அலைஹி)'' என்பதாகும். சுருக்கமாக 'பூஸரி இமாம்' என்று சொல்லலாம்.

ஆசிரியரான ஷெய்கு பூஸரி அவர்களுக்கு, 'லக்வா' என்னும் பாரிச வாய்வு நோய் கண்டு விட்டது. 'பாலிஜ்' என்றும் இவ்வியாதிக்குப் பெயர் சொல்லப்படும். வாயு மிகுதியினுல் கைகால் துவண்டு சோர்ந்து விழுந்து விடுகிறதே அந்த வியாதிதான்.

இமாம் அவர்கட்கு, இரண்டு கால்களில் 'லக்வா' நோய் அடித்து விட்டது. எழுந்திருக்கவோ, நடக்கவோ முடியாது. படுத்த படுக்கையாய் கிடந்து விட்டார்கள் பல மாதம்.

உற்ருர் உறவினர்கள், தகுந்த ஹக்கிம்களை அழைத்து, வைத்தியம் செய்து பார்த்தார்கள். ஒன்றும் பிரயோஜனம் ஏற்படவில்லை. பணமும் காலமும் செலவழிந்ததுதான் மிச்சம்.

அப்போது ஷெய்கு அல்பூஸரிக்கு ஓர் எண்ணம் தோன்றியது. "கேவலம், வைத்தியர்களால், என் வியாதியைப் போக்கமுடியாது. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருள் வடிவான ரஹ்மத்துன்லில் ஆலமீன், லோக தயாளர், நபிகள் நாதர் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய துஆ பரக்கத்தின் பொருட்டால்தான் தேக சௌக்கியம் ஏற்படவேண்டும்'' என்று திடமனத்துடன் தீர்மானம் செய்து கொண்டார்கள்.

## ஓர் இரவு நிகழ்ந்தது.

எனவே, பூஸரி இமாம் அவர்கள், படுத்த படுக்கையில் இருந்தவண்ணமே, கையை மட்டும் அசைத்து 'கலம்' என்னும் எழுதுகோல் கொண்டு இனிய அரபு மொழியில் ஈரடிப்பாக்களாக "புர்தா" கஸீதாவை, மிகப் பிரியத்தோடும் பக்தியோடும் உள்ளம் உருகப்பாடி இயற்றினுர்கள். அவர்கள் இக்கஸீதாவை இயற்றிய முக்கியகோரிக்கை, இதை ஒரு வஸீலாவாக காணிக்கையாக, எல்லாம் வல்ல இறைவனுகிய அல்லாஹு தஆலாவுடைய சன்னிதானத்தில் சமர்ப்பித்து, அதன் பொருட்டால், தன் "லக்வா" என்னும் பாரிசவாயு நோய் நீங்க வேண்டிக் கொள்ளவேண்டு மென்பதாகும்.

அவ்வாறே ஓர் இரவு அதாவது வெள்ளிக்கிழமை இரவு (வியாழக்கிழமை மாலை) வீட்டில் எல்லோரும் உண்டு உறங்கிய பின், அல்பூஸரி இமாம் அவர்கள், மெல்ல நகர்ந்து நகர்ந்து ஒரு தனி அறைக்குச் சென்ருர்கள். அங்கு தனித்து இருந்துகொண்டு, அருளாளனும் அன்பு ததும்பியவனுமான அல்லாஹுவுடைய தர்பாரில், இணையிலா சன்னிதானத்தில், இருகரங்களையும் ஏந்திக்கொண்டு, தாம் முன்னம் இயற்றிய "கவாக்கிபுத் துர்ரிய்யா பீ மனுகிபு கய்ரில் பரிய்யா'' என்னும் கஸீதா

புர்தாவின் பாமலர்களாகிய புகழ்மாலையை, உள்ளம் நெக்குருக, மனம் துணுக்குற, மெய் சிலிர்த்து, பக்திப் பரவசத்தோடு பாடிப்படித்து ஓதினார்கள்.

## கனவில் கண்ட காட்சி.

அங்ஙனம் ஓதி முடித்த ஷெய்கு அல்பூஸரி அவர்களுக்கு, அவர்களையும் அறியாமல் தூக்கம் ஆட்கொண்டுவிட்டது. நித்திரை புரிந்தார்கள். அந்த சமயம் அவர்கள் கனவில் கண்ட புனித காட்சி யாதெனில்:—

லோகதயாளர் நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது புனித திருவுருவைக் காணும் பாக்கியம் பெற்றார்கள் பூஸரி இமாம். எம்பெருமானார்(ஸல்) திருச்சமுகத்தில் அல்பூஸரி இமாம் அவர்கள் முறையிட்டுக் கொண்டு, தம்முடைய உடலை வாட்டிவரும் 'பாலிஜ்' என்னும் முடக்கு வியாதியை நிவர்த்தி செய்து சரீர சௌக்கியம் அளிக்க வேண்டுமென்று பெரிதும் வேண்டிக்கொண்டார்கள்.

எம் பெருமானார் நபி (ஸல்) அவர்கள், அந்த சுப சொர்ப்பனத்தில் தங்கள் மலர்க் கரங்களைக் கொண்டு, பூஸரி இமாமுடைய துவண்டுத் தொங்கிப் போன அங்கங்களை மெல்லத் தடவிக் கொடுத்து, ஆண்டவனிடம் துஆவும் செய்தார்கள். ஜீவ பராபரனும் பக்தரக்ஷகனுமாகிய அல்லாஹு தஆலா, தன்னுடைய ஹபீபான நந்நபியுடைய கோரிக்கைக் கிணங்க, இமாம் அல்பூஸரி அவர்களுக்கு பரிபூரண தேக சௌக்கியத்தை அப்போதே தந்தருளினான்.

## கடைத் தெருவில் கண்ட காட்சி.

மறுநாளோ அதற்கடுத்த நாளோ, இமாம் ஷெய்கு பூஸரி அவர்கள், ஏதோ காரியார்த்தமாக கடைத் தெருவுக்குப் போனார்கள். போகும் பாதையில், இடையில் யாரோ ஒரு ஏழைப் பெரியார், குறுக்கிட்டு, பூஸரிக்கு 'ஸலாம்' செய்து சொல்லலானார்:

"ஏ ஷர்புத்தீன் பூஸரி சாஹிபே, நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) மீது நீர் பாடி இயற்றி யிருக்கிறீரே அந்தப் புகழ் மாலையாகிய கஸீதாவை, எனக்கும் தயவு செய்து படித்துக் காட்டுவீரா?" என்று கேட்டார்.

அதற்கு ஷெய்கு பூஸரி இமாம், ஆச்சரியப்பட்டு, "நான், நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) மீது அநேக புகழ்ப்பாக்கள் பாடி, பல கஸீதாக்கள் இயற்றி யிருக்கிறேனே; அதில் தாங்கள் பாடிக்காட்டும்படி கோருகிறீர்களே, அது எந்தக் கஸீதாவோ?" என்று வினவினார்கள்.

அதற்கு அந்த வெண்தாடிப் பெரியார், பூஸரி இமாமை பிரியத்துடன் நோக்கி, "ஷெய்கு சாஹிபே, 'அமின் தத்குரி ஜீரானின் பிதீ

1792

ஸலம்......' என்ற அடியை ஆரம்பமாகக் கொண்டு இயற்றிப் பாடினீரே அந்த 'புர்தா' கஸீதா தான்" என்று திட்டவட்டமாகக் கூறினார்கள்.

ஷெய்கு பூஸரி அவர்கள், எதிர்பாராத இம்மொழியைக் கேட்டதும், போச்சரியப் பட்டார்கள். "இதென்ன விந்தை! நாம் இயற்றிய இப்புது கஸீதாவை, நாம் எந்த பூலோக மானிடருக்கும் பாடிக்காட்டவில்லையே; இது இந்தக் கிழவருக்கு எப்படித் தெரிந்து விட்டது" என்று தமக்குள் வியந்து விட்டு, அந்தப் பெரியவரை நோக்கிக் கேட்கலானார்:

"அஜீ ஹஜ்றத், உண்மையாக, இதை நான் பாட, படிக்க எப்போது நீர் கேட்டீர்? இதுகாறும் இதை நான் யாருக்கும் பகிரங்கப் படுத்தியதில்லையே, சொல்லுங்கள்" என்று வினவினார்.

அதற்கு அந்த புதுமைப் பெரியார், "ஏ ஷெய்கு சாஹிபே அன்றிரவு கனவில் நீவிர் இந்த கஸீதாவை, நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருச் சன்னிதானத்தில் பரவசமாய் படித்துக் காட்டினீரே; அதைச் செவி யேற்று செம்மல் நபியவர்கள், உமது முடக்கு வியாதியை இறைவனிடம் துஆ கேட்டுப்போக்கி விட்டார்களல்லவா?" என்று வியக்தமாகப் புகன்றார்.

இதற்கு மேல், ஷெய்கு பூஸரி இமாம், அந்தப் பெரியாரை கேள்வி யொன்றும் கேளாமல், தமது கஸீதாவைப் பாடிக் காட்டினார். அதை அவர் ஓர் ஏட்டில் எழுதிக் கொண்டு போய் விட்டார்.

## வேறு சில அற்புதங்கள்.

இந்த விதமாக, பூஸரி இமாமுடைய 'புர்தா' கஸீதா, மாந்தர்களிடம் பகிரங்கமாகிப் பரவி விட்டது. இதன் பொருட்டால், புண்ய பயனும் உலகப் பிரயோஜனமும் அடைந்த பேர்கள் அனந்த மனந்தமாவர் :—

(1) தாஹிர் சுல்தான் பஹாவுத்தீன் என்பவர் வரை இந்த கஸீதா புர்தா போய்ச் சேர்ந்தது. அவரும் அவருடைய மந்திரிப் பிரதானிகளும், இந்த புர்தா புகழ் மாலையை, மிக பக்தி சிரத்தையோடு ஓதிப் பயனடைந்து வந்தார்கள். அவர்கள் ராஜ்யம் புகழுடன் ஓங்கி வளர்ந்தது.

(2) அந்த ஸுல்தானிடம் ஒரு உதவியாளர்—பிரதி நிதி காரியதரிசி இருந்து வந்தார். இவர் பெயர், ஸஅதுத்தீன் பாரூகி என்பதாம். இவருக்கு கண் குருடாய் போய் யிருந்ததாம். இவருடைய கனவில் யாரோ ஒரு வெண்தாடிப் பெரியார் சொல்லி, இவர் கஸீதா புர்தாவை பக்தி சிரத்தையோடு ஓதியதால், இவ்வருடைய குருட்டுத் தனம் நீங்கி

கண் பார்வை ஏற்பட்டதாம். இதை அவர் தினமும் ஓதி கண்களில் ஒத்திக் கொள்வாராம்.

சிறுவர்களே! பார்த்தீர்களா! 'ஹுப்பே நபி' என்னும் திரு நபி விசுவாசத்தில் உள்ள மகிமையை! நீங்களும், எந்த நல்ல காரியத்தை, மனத் தூய்மையோடு, அல்லாஹ்வுக்காகவும் தூயநபி ரஸூலுக்காகவும் செய்து வருவீர்களானால், ஆண்டவன் கிருபையால் உங்கள் கஷ்டம் நீங்கி, அபிலாஷை யாவும் நிறைவேறு மென்பதில் சந்தேகம் இல்லை.

---

குறிப்பு :—"அல்பூபஸ்ரி" என்ற திருத்தமான பெயரே, 'அல் பூஸரி' என்றும் 'பூஸரி' என்று மருவிற் றென்று அறியப்படுகிறது.

அரபு கஸீததுல் புர்தா விலை ரூ. 0—7—0
ஷை அறபுத் தமிழ் தர்ஜுமாவுடன் விலை ரூ. 1—0—0

---

# முனாஜாத்து.

(மேல்விஷாரம் கவிஞர் மாஸ்டர் கமல் பாபு)

இராகம்—அனார்கலி ஹிந்துஸ்தானி தாளம்

ஏஜிந்தகி உஸிகிஹை மெட்டு

அழியும் அகில ஆசையால்
அறிவிருந்து மதையிழந்து
ஆண்டவன் தனை மறந்தேனே.

பேராசையின் பொருள்களால்
வஞ்சித்தேனே உலகோரை
படைத்த நாயனான உன்னையும்
ஒரு நாளும் வணங்கிடாமல்

பாரை சதமென்று நான்
படு மோசம் போனேனே. (அழியும்)

மடமையான என் மனதை
மணமதாக்கி வைத்தெந்தன்
கடுமையான பிணிகள் யாவும்
கருணையுடன் நீக்கிவைத்து

அன்புடனே யா அல்லாஹ்
அடிமை "கமால்" பிழை பொறுப்பாயே (அழியும்)

# “வின்ஸ்டன் சர்ச்சில்”

(முஹம்மது தாவூது)

## (1—வது பகுதி)

அரசியல் அறிவு முதிர்ச்சியும் அனுபவ தேர்ச்சியு முள்ளவரும் தாரணியிலுள்ள தலை சிறந்த ராஜதந்திரிகளி லொருவருமான சர்வின்ஸ்டன் சர்ச்சில் மிகப்பொல்லாத பேர்வழி என்பதை எவரும் எக்காலத்திலும் மறக்க முடியாது, மறுக்க இயலாது. வீண் பேச்சுகளில் ஈடுபட்டு விதண்டாவாதம் செய்யும் உலகத்தவரிடையே உறுதியான மனோபாவம் உள்ளவராக அவர் திகழ்கிறார்; எழுபத்து எழு ஆண்டுகளாகப் பொதுவாழ்வில் ஈடுபட்டுச் சேவை செய்துவரும் அவர் காரிய சாதனையிலே கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறார். நெருக்கடியான நேரங்களிலே அவரது தீர்க்கதரிசனம் சரியானதாக விருந்தது. வரும்முன் காப்போராக, முன்னறிவுடையவர்களாக எவரும் இல்லாமையால் அவரது தீர்க்கதரிசனங்களே அவரது நாட்டு மக்களுக்குப் பெரும் சுமையாக அமைந்தன. இங்கிலாந்து தேச மக்களின் மனதைப் பிரதிபலிக்கும் தலைவராக, அபாய வேளைகளிலே அத்தியாவசிய மனிதராக அவர் இருந்திருக்கிறார். எனினும், குறும்புத்தனமும் சிறு பிள்ளைத் தனமும் அவரிடம் குடிகொண்டிருக்கின்றன.

அரசியல் துறையிலே அடிக்கடி அலைக்கழிக்கப்பட்ட போதிலும்—அதிகார பீடத்திலிருந்து அடிக்கடி அகற்றப்பட்ட போதிலும்—அவர் தாழ்வு மனோபாவத்துக்கு இரையாகாமல் தலை நிமிர்ந்து நின்றார். பொறுமையின்மை என்னும் உயரிய பண்பு அவரிடம் நிலைத்திருந்தது. கிளப்பில் ‘வளவள’ என வார்த்தையாடி வம்பளப்பவ ரொருவரின் கதையைக் கேட்டுக் கொண்டிருப்பதற்கென பணியாள் ஒருவனை நியமித்தவரான ரண்டால்ப் சர்ச்சில் பிரபுவின் புதல்வரல்லவா இவர்! நீண்ட பிரசங்கம் கேட்பது அவருக்கு அருவருப்பாக விருந்தது. காமன்ஸ் சபையிலே முடிவில்லாத, நீண்ட விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது காதுகேட்கும் கருவியுடன் வயோதிக அங்கத்தினரொருவர் முன் பக்கம் சாய்ந்து பிரசங்கிகளின் சொற்களை உற்றுக் கேட்டுக்கொண்டிருப்பதைக் கண்ட அவர் சபை முழுவதும் கேட்கக் கூடிய உரத்ததொனியில் இயற்கை அளித்துள்ள அருட்கொடையை அதாவது செவிட்டுத் தன்மையைப் பயன்படுத்திக் கொள்ளாமலிருக்கும் அந்த முட்டாள் யார் என அந்தோனி ஈடனைப்பார்த்து வினவினர். சபையின் அங்கத்தினரொருவரைப் பற்றி அவமரியாதையாகக்

கூறியமைக்காக அவரைச் சபா நாயகர் கடிந்து கொண்டார். எனினும், சர்ச்சில் இவ்வித கண்டிப்புக்கு பயந்து, பணிந்து விடுபவரா என்ன?

கண்டனம், சுயசந்தேகம் ஆகியவற்றை அசட்டை செய்யும் மன உறுதி படைத்தவராக அவர் இருந்தார். அவர் அணிந்துகொள்ளும் உடையே இதற்கு உதாரணமாகும். சர்ச்சிலின் உடையைக்கண்டு பலபிரபலஸ்தர்கள் தமது அதிருப்தி அதிர்ச்சி, ஆத்திரம் தெரிவித்துக் கொண்டுள்ளனர். 1940-ம் வருஷம் விமானத்தாக்குதல் எதிர்ப்பு பீரங்கிப் படை அணிவகுப்பைப் பார்வையிடச் சென்றபோது கடற் படையினருக்குரிய உடையுடன் உல்லாசப்பிரயாணம் செய்யும்போது அணிந்து கொள்ளும் தொப்பியுடன் அவர் காணப்பட்டார். பிரிவி கவுன்ஸிலர் பதவிக்கு எட்வர்டு மன்னரால் உயர்த்தப்பட்டபோது விசித்திரமான உடை அணிந்து விண்ட்ஸர் மாளிகைக்குச் சென்று பரபரப்பு ஏற்படுத்தினர். அனேகந்தடவை தமது தாயாருடன் சவாரி சென்றபோது அவளது குதிரைக்காரன் என்றே அவர் கருதப் பட்டார்! ஏர்லி கோமகளின் பேத்தி கிளெமென்டைன் ஹோஸியர் என்னும் அழகியை மணந்து கொண்டபோது விவாக வைபவத்தின் போது அவர் பிரௌன் நிற பாதரக்ஷைகளை அவர் அணிந்தி ருந்தாராம். சென்ற யுத்தத்தின்போது அவர் கண்டுபிடித்திருந்த யூதர்கள் அணிந்து கொள்வதைப் போன்ற நீண்ட அங்கி (Gaber dine rompers, or "Siren Suit") மோசமானது, உதவாக்கரை யானது என நண்பரொருவர் நவின்றபோது, அவருக்கு வணக்கம் செலுத்தினர். கோடு போட்ட ஆதேவித ஆடைக்கு அவர் 'ஆர்டர்' கொடுத்தார்.

சர்ச்சில் சுயேச்சையான குணம் உள்ளவர். தமது சொந்த அபிப்பிராயங்களுக்குப் பூரண மதிப்பு அளிப்பதன் மூலம் அவர் பிரக்யாதிபெற்றிருக்கிறார். கன்ஸர் வெடிவ், லிபரல் ஆகிய இருகட்சி களின் ராஜதந்திரி, பிரசங்கி, சரித்திராசிரியர், புத்திசாலி; யுத்தநிருபர், மதுபான (Brandy) குடியர் ஆகிய துறைகளிலே அவர் அழியாப் புகழ் பெற்றுள்ளார். மற்றும் சித்திரக்காரர், கொல்லத்துக்காரர், நாவலாசிரியர், விமானமோட்டி, போலோ (Polo) ஆட்டக்காரர், சோல்ஜர், பந்தயக்குதிரை சொந்தக்காரர் முதலிய ஹோதாக்களிலும் அவர் சிறிது புகழடைந்திருக்கிறார். மனித குலம் தோற்றுவித்துள்ள ஜீவனுள்ள நபர் என அவரை வர்ணித்து விடலாம்.

சாதாரண, சாமானிய அறிவு படைத்தவர்களை விட விவேகியை உயர்ந்தவனுக்குவது எது? சர்ச்சிலை நன்கு அறிந்தவர்கள் மூன்று வித சக்திகள் அவரிடம் கலந்து காணப்படுகின்றன என நம்புகின்றனர். அந்த மூன்று சக்திகளும் வருமாறு:—இணையற்ற உற்சாகம், ஊக்கம், புத்திசாதுரியமும் ஞாபகசக்தியும்; அதிகார ஆசை படையெடுத்துச்

சென்று வாகைமாலை சூடுவதற்கு உலகில் நாடுகள் இல்லையே எனக் கவலைப்பட்ட அலெக்ஸாந்தருக்கு அடுத்தபடியாக அதிகார ஆசை கொண்டவர் இவர். உற்சாகமும் ஊக்கமும் உதயமாகின்றனவே யன்றி உற்பத்தி செய்யப்படவில்லை என வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். மானிடர்களுக்கு உத்வேகம் அளிக்கும் ஜீவசக்தி வைடமின்களை விட மூதாதையர்களைப் பெரிதும் பொறுத்திருக்கிறது என்பது அவர்கள் கூற்று. இந்த இருவகைகளிலும் சர்ச்சில் அதிர்ஷ்டசாலி. சாப்பிடுவதில் அவருக்குள்ள சமர்த்து ரஷ்யர்களைப் பெரிதும் கவர்ந்தது. 'கேவியர்' (Caviar) என்னும் மீன், ஒட்கா (Vodka) என்னும் மதுபானம் ஆகியவற்றைச் சென்ற யுத்தத்தின்போது அவர் அதிகம் சாப்பிட்டார்; இதே சமயத்திலே ஹிட்லர் வெறுமனே கைவைத்துக்கொண்டு எதுவும் அருந்தாமல் இருந்தார். சரியான பக்கபலத்துடன் போர் செய்கிறோம் என்ற நம்பிக்கை ரஷ்யர்களுக்கு ஏற்பட்டது. இவ்விஷயத்தில் தம் மூதாதையரையும் அவர் தோற்கடித்து விட்டார்.

பிளென்ஹீம் மாளிகையில் 1874ம் வருடம் சர்ச்சில் பிறந்தார். அவரது தாத்தாவான ஏழாவது மார்ல்பரோ கோமகனுக்கு அம்மாளிகை அப்போது சொந்தமாக விருந்தது. பிரம்மாண்டமான அக்கல் கட்டடம் முன்னூற்று இருபது அறைகள் கொண்டது. மாளிகையைச் சுற்றி இரண்டாயிரத்து நூறு ஏக்கர் விஸ்தீரண நிலப்பகுதி உள்ளது. 1704ம் வருஷம் பிளென்ஹிம் போரில் பிரெஞ்சுக்காரர்களை முறியடித்த தற்காக தமது பிரதம சேனாதிபதியான முதலாவது மார்ல் பரோ கோமகனுக்கு ராணி ஆன் (Queen Anne) அம்மாளிகையை அன்பளிப்பாக வழங்கி யிருந்தார்.

தமது மூதாதையரான முதல் மார்ல்பரோ கோமகனையே முன் மாதிரியாகக் கொண்டிருந்தார் சர்ச்சில். சாதாரணப் பணியாளாக விருந்த முதல் மார்ல்பரோ கோமகன் பின்னர் உயர்ந்த நிலைக்குவந்து புகழுடனும் பெரும் செல்வத்துடனும் வாழ்ந்தாரல்லவா? அதேபோல, சர்ச்சிலும் சாதாரண நிலையிலிருந்து மிக உன்னத நிலைக்கு உயர்ந்தார். 1930ம் வருட வாக்கிலே எழுதிய நான்கு வால்யூம் கொண்ட நூலில் இந்த மூதாதையரைப் பற்றி சர்ச்சில் மிகவும் புகழ்ந்து எழுதியுள்ளார். தமது பிரசங்கங்களில்கூட அவரது பெயரை அவர் அடிக்கடி பிரஸ்தாபித்து வருகிறார்.

சர்ச்சிலின் தாயார் ஒரு அமெரிக்க மாது; அவர் அழகு சௌந்தர்யமுள்ள அணங்கு; கூரிய புத்திபடைத்த அம்மாது குறும்புத்தனமாகப் பேசி தமாஷ் செய்வதில் சமர்த்தர். சிறுபையனாக இருந்தபோது தமது தாயாரை சர்ச்சில் காணவில்லை.

பிரிட்டிஷ் பிரபு குடும்பத்தைச்சேர்ந்தோர் குழந்தை பராமரிப்பை விட்டுப் பணியாட்களிடம் விட்டுவிடுவதும் அல்லது சிறு வயதிலேயே

குழந்தைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பி அங்கேயே தங்கும் வசதி செய்து கொடுப்பதும் வழக்கமல்லவா? எனவே, உயர் குடும்பத்தில் உதித்த உத்தம சர்ச்சில் சிறு வயதில் தமது தாயாரை எப்படி கண்டிருக்க முடியும்? தமது தாயாரைப் பற்றி சர்ச்சில் எழுதி யிருப்பதாவது: அவளை அன்பாக நேசித்தேன். ஆனல் அவளுக்கு வெகு தூரத்தில் நான் இருந்து வந்தேன். அழகு படைத்த அரச குமாரியாகவே, என் கண்களுக்கு அவள் தோற்ற மளித்தாள்! பார்லிமெண்டிலே செல்வாக்குப் பெற்றிருந்தவரும் விவேகியுமான ரண்டால்ப் பிரபுகூட ஒதுங்கியே வாழ்ந்து வந்தார். தந்தை—தனயன் ஆகியோரிடையே சம்பந்தம் ஏற்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளுக்கும் அவர் 'பிடி' கொடுக்கவில்லை.

சிறுவராக இருந்தபோது, வின்ஸ்டன் சர்ச்சில் முரட்டுப்பிடிவாத குணம் உடையவராக விருந்தார். அவரது தோற்றமே அவருடைய உணர்ச்சிகளையும் உள்ளக் கிடக்கையையும் உணர்த்துவதாக விருந்தது. குட்டை மனிதரான அவர் தேமல் உள்ளவராகவும் செப்பட்டை மயிர் உடையவராகவும் சப்பை மூக்கு உள்ளவராகவும் இருந்தார். அவரிடம் பொறுமையின்மை குடி கொண்டிருந்தது.

முதல் தடவையாக ஈயத்தால் செய்யப்பட்ட பொம்மை சோல்ஜர்கள் அவருக்கு அளிக்கப்பட்டது. முதல் யுத்த அரங்கில் ஈடுபட வேண்டுமென்ற அவா, அபிலாஷை அவருக்கு ஏற்பட்டது. மொத்தம் ஆயிரத்து ஐந்நூறு அழகான பொம்மைகளை ஒன்று திரட்டி, அவைகளை அணி அணியாக நிறுத்தி வைத்தார். ஒருநாள் போர்க்களத்துக்கு விஜயம் செய்து அணிவகுப்பைப் பார்வையிடுவதற்கு அவரது தந்தை சம்மதித்தார். தனயரிடம் கேள்விகள் கேட்டு அவரது நடவடிக்கைகளை நோட்ட மிட்ட பின்பு, ராணுவத்தில் சேர்ந்து சேவைசெய்ய நீ விரும்புகிறாயா, என தந்தை வினவினர். 'ஆம்' என சர்ச்சில் விடைபகர்ந்தார். இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக ரண்டால்ட் பிரபு கூறிச் சென்றார். பின்னர், நண்பரொருவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது, தமது மகனுக்குச் சிறிது சித்தப் பிரமை ஏற்பட்டிருப்பதாகவும் அவரை ராணுவத்தில் சேர்த்து விட்டால் எல்லாம் சரியாகப் போய்விடுமென்பதாகவும் பிரபு கூறினர்.

அரசியல் அரங்க விஷயங்களையும் விவகாரங்களையும் சிறு வயதிலேயே தெரிந்து கொள்வதற்கு சர்ச்சிலுக்குச் சமய சந்தர்ப்பங்கள் கிடைத்தன. எப்போதாவது ஒரு சமயம் தான் மற்ற சிறு பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவதற்கு அவர் அனுமதிக்கப்பட்டார். தமது சிறு வயது அனுபவம் பற்றி அவர் எழுதுவதாவது: எனது தந்தையின் இல்லத்திலே பார்லிமெண்டரி தலைவர்கள் பலரை நான் சந்தித்தேன். அந்த சமயத்திலே சர்ச்சைக் கிடமாக விருந்த பிரச்னைகள்

குறித்து அவர்கள் அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொண்டிருந்த வேளைகளில் அவர்களுடன் விருந்து சாப்பிட்டிருக்கிறேன். மிகச் சிறந்த பரந்த உலகில் இம்மனிதர்கள் வசித்து வந்ததாக (எனக்குத்) தோன்றியது.

வாழ்க்கையின் ஆரம்பப் பகுதி இம்மாதிரி இருந்திருக்குமானால் மற்றப் பிள்ளைகளுக்கு நாசம் தான் விளைந்திருக்கும். அரசியல் அக்கப்போர் பற்றிய அவரவரது அபிப்பிராயங்களைக் கேட்கும் போது சில சமயங்களில் சர்ச்சில் கூட பரிதாபகரமான நிலையில் இருந்திருக்கிறார். பின்னர் அவர் கூறியதாவது: "எனக்கு அறிமுகமான எல்லாப் பெரிய மனிதர்களும் சந்தோஷமில்லா குழந்தைப் பருவத்தின் உற்பத்தி சரக்குகள் தான்"

சர்ச்சிலின் ஆரம்ப பாடசாலைப் படிப்புக்கு வரலாற்றிலே இணை இருக்க முடியாது. படிப்புக்கு பரம வைரியாக அவர் இருந்தார். அஸ்காட்டிலுள்ள பாடசாலைக்கு அனுப்பிய போதிலும் படிப்பு விஷயத்தில் அவர் பராமுகமாகவே இருந்தார். பாடசாலையில் சேர்ந்த நாள் முதற் கொண்டு அடிக்கடி பிரப்பம்பழ அறை (Caning Room)க்கு அவர் சென்று, தலைமை உபாத்தியாயரிட மிருந்து சவுக்கடி பெற்று வரலானார். லத்தின் மொழியை அவர் அறவே வெறுத்தார்; பாடசாலைப் படிப்புக்காலம் வரை அதைக்கற்றுக் கொள்வதற்கு அவர் அடியோடு மறுத்து வந்தார். பிற்காலத்தில், அரசியல் பிரசங்கங்களில் நீண்ட லத்தின் சொற்றொடர்களைச் சேர்த்துக் கூறுவதால் ஏற்படக் கூடிய அனுகூலத்தை அறிந்ததும், லத்தீன் கற்றுக்கொள்வதில் அவர் கவனஞ் செலுத்தினார். அவருக்கே உரிய பாணியிலே, லத்தீன் மேற்கோள்கள்கொண்ட ஒரு அகராதி முழுவதையும் அவர் மனப்பாடம் செய்து விட்டார்.

1888-ம் வருடம் பிரிட்டனின் வருங்காலப் பிரதம மந்திரி ஹாரோ பாடசாலையில் சேர்ந்தபோது, மிகக் கீழ் வகுப்பில் அவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அது ஒரு லத்தின் வகுப்பு. நாலரை ஆண்டுகள் ஆனபிறகும் அந்த வகுப்பைவிட்டு அவர் நகரவேயில்லை, அதாவது மேல் வகுப்புக்கு அவர் 'பிரமோஷன்' ஆகவில்லை. அவரது ஆசிரியர் இதுபற்றிக் கூறுவதாவது: "அவனுக்குப் படிப்புக் சொல்லிக் கொடுப்பது எளிய காரியமல்ல. அவனுக்கு கூரிய புத்தி இருந்தது வாஸ்தவம் தான். ஆனால், அவன் விரும்பியபோதும், அவனுக்குப் பிடித்த உபாத்தியாயர்கள் பாடம் கொடுத்தபோதும் தான் அவன் பாடம் எழுதியும் படித்தும் வந்தான். மற்ற சமயங்களில் அவன் பராமுகமாக இருந்தான்."

(தொடரும்.)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

187042

# பத்ஹுர் ரஹ்மான் பிஃபிக்ஹின் னுஃமான்.

## (ஹனபி மதுஹபுக்குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜன மில்லாத கல்வி என்று இரண்டுவகை யுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்தாச் சொல்வது பிரயோஜனமில்லாத கல்வி. நம் மனமும் ஒழுக்கமும் சீர்பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தாக் கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்கமுறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையுங் கற்றறிந்து அமல் செய்யவேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும். இதுதான் இம்மை, மறுமை இருலோகத்தில் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுகவேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கமும், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கியிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்காங்கு அரபு மொழியில் ஓத வேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அறபியிலேயும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும். இதன் விலை ரூ. 3

ஷை அறபுத் தமிழ் அல்பத்ஹுர் றப்பானீ-பி-பிக்ஹின் னுஃமானி விலை ரூ. 5

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

கே, 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

ஸீரத்துல் குப்ரு வென்னும்

# கதீஜா நாயகி (ரலி)

# ஜீவிய சரித்திரம்

இச்சரித்திரமானது எஜமானியாக ஏற்று பின்பற்றத்தக்க நாயகியான மஹா மங்கை பொருந்திய நபி பெருமாட்டியின் ஜீவவிருத்தாந்தமாகும். இம்மங்கையர் தமது வடிவாம்சங்களில் உலகப் பெண்கள் எல்லாரினும் மீக்குற்றவர்; அன்றியும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நம்பிராட்டிகள் எல்லாரினும் பிரதமமானவர் என்ற பெருமை அவருக்கு வாய்ந்திருந்தது. அவரது வாழ்க்கை சம்மந்தமான இந்த சரித்திரம் அனைவரும் படித்து அனுஷ்டிக்கத்தக்கதா யிருக்கிறது.

இதில் கதீஜா நாயகியின் வம்ச பாரம்பரையும், முதற் கலியாணங்களும் அவர்களின் வர்த்தகச் செல்வமும், றஸூல் நாயகம் (ஸல்) ஷாம், மிஸர் தேசங்களுக்கு யாத்திரை போய் வந்ததும், கதீஜா பெருமாட்டிக்கும் நபிகள் பெருமானுருக்கும் திருக் கலியாணம் முடிந்ததும் கதீஜா பெருமாட்டி தமது உரிமையைக் கணவருக்கு அர்பணஞ் செய்ததும், நபி பெருமானுருக்கு வஹி இறங்குதல், நபிபட்டந் தரித்தல், நபிகள் பெருமானுருக்கு கதீஜா பெருமாட்டியின் உதவி, கதீஜா பெருமாட்டியின் மௌத் முதலியவைக ளடங்கி யிருக்கின்றன. இச்சரிதையில் நம் முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு அளவற்ற போதனைகள் நிறைந்திருக்கின்றன.

கிளேஸ் காகிதம் இதன் விலை ரூ. 1—4—0

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 2—2—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.